பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 17 புதன்கிழமை 01.01.2025 கதிர் 055

### இது ரகசியம் அல்ல!

புத்தாண்டு தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்புக்குமிகச்சவாலானதாக அமையும் என்பது இப்போதே தெளிவாகின்றது. ஏற்கனவே இந்த ஆளும்தரப்பு "முறைமை

2

## சமஷ்டி பிரிவினையல்ல அநுர புரிந்கொள்ளட்டும்

### தமிழ் அரசுக் கட்சித் தலைவர் சிவஞானம் விளக்கம்

சமஸ்டி பிரிவினையல்ல. அது பிரிவினைக்கிட்டுச் செல்லும் தீர்வும் அல்ல. நாங்கள் பிரிவினைவாதிகளும் அல்லர். இடதுசாரி கொள்கையில் இருந்து ஜனாதிபதியாக தெரிவான அநுரகுமார திஸாநாயக்க இதனை புரிந்து புத்தாண்டில் செயற்பட வேண்டும் என இலங்கை தமிழ் அரசுக் கட்சித் தலைவரும் வடமாகாண அவைத் தலைவருமான சிவஞானம்

2



## பெப்ரவரி முதல் மார்ச் வரை வரவு செலவுத் திட்ட விவாதம்

2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தை (வரவுசெலவுத்திட்ட விவாதம்) 2025 பெப்ரவரி 18ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை நடத்துவதற்குத்

7

### புலமைப் பரிசில் பரீட்சை விவகாரம்

## சிறிய கால அவகாசம் கேட்கிறார் பரீட்சை ஆணையாளர் நாயகம்

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கு அமைய மிகவும் பொருத்தமான தெரிவை ஆராய சிறிது கால அவகாசம் தேவை என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயர் நீதிமன்ற தீர்ப்பு இன்று எனக்கு கிடைத்தது.. 68 பக்க தீர்ப்பு. மிகவும் பொருத்தமான முடிவை எடுத்து அதை அமல்படுத்த நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. இதனை ஆய்வு செய்து வருகிறோம். எது பொருத்தமான தெரிவு என்று ஒரேயடியாகச் சொல்லமுடியாது. அது தொடர்பில் ஆய்வு செய்யவேண்டும்.

வழக்கமாக, புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை வழங்குவதற்கு சுமார் 40 நாட்கள் ஆகும். முன்னுரிமை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

7

## அதிகாரவெறி கொண்ட ஆட்சியாளர்கள் கூறுவதுபோல காட்டிக்கொடுத்ததில்லை

### உணர்ச்சி மிக அறிக்கையில் ஜெனரல் சவேந்திர தெரிவிப்பு

2022இல் நாட்டில் மக்கள் எழுச்சி ஏற்பட்டபோது நாட்டில் அதிகார வெறிகொண்ட ஆட்சியாளர்கள் கூறுவதைப்போன்று நாட்டைக் காட்டிக்கொடுக்கும் எண்ணம் தனக்கு இருக்கவில்லை என்று ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுக்கு இயல்பாக நடந்து கொள்ள வேண்டுமென்றோ வெளிநாட்டுத் தூதரகத்துக்கு செல்லப்பிள்ளையாக இருக்க வேண்டுமென்றோ தனக்குகீழ்த்தரமான எண்ணம் இருக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

பாதுகாப்பு படைகளின் பிரதானி பதவியிலிருந்து நேற்றுடன் விடைபெறும் அவர் 'நான் சவேந்திர' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள குறிப்பிலேயே

2

## ஊழல், ஒழிப்பு சட்ட திருத்திற்கு அனுமதி

ஊழல் ஒழிப்பு சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு

2

## தீபமேற்றி நல்லூரில் புத்தாண்டு வரவேற்பு



வரலாற்று சிறப்புமிக்க யாழ்ப்பாணம் - நல்லூர் கந்தசுவாமி கோவில் வளாகத்தில் நேற்று நள்ளிரவு தீபமேற்றி ஆங்கிலப் புத்தாண்டு வரவேற்கப்பட்டது.

2025ஆம் ஆண்டு பிறந்த நேரத்தில் நள்ளிரவு 12 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் தேரடியில்

7

## பொதுமக்களுக்குப் பொறுப்புக்கூற அமைச்சுகளில் விசாரணை அலகு

அரச நிறுவனங்கள் பொதுமக்களுக்கு வகைகூறுதலை உறுதி செய்வதற்காக அமைச்சுக்களில் விசாரணை அலகுகளை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது அரச சேவை தொடர்பில் நாளாந்தம் அதிகளவு முறைப்பாடுகள் பெயர் குறிப்பிட்டும், அநாமதேயமாகவும் ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்குக் கிடைத்து வருகின்றது. ஆளும்தரப்பு மீது மக்கள் வெளிப்படுத்தியுள்ள நம்பிக்கையைப் பாதுகாப்பதற்கும், குறிப்பாக அரச சேவையில் எதிர்பார்க்கப்படும் சாதகமான மாற்றங்களை மேற்கொள்வதற்காக, முறைப்பாடுகள் தொடர்பாகப் பக்கச்சார்பற்ற வகையிலும் அறிவியல் ரீதியாகவும்

7



## மக்களின் கனவை நனவாக்க முன்னோக்கிப் பயணிப்போம்

### ஜனாதிபதி புத்தாண்டு வாழ்த்து

அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்குவதற்கான கனவை நனவாக்குவதற்காக முன்னோக்கிப் பயணிப்போம் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

நாடும் நாட்டு மக்களும் பலதசாப்த காலமாகக் கண்ட நல்ல கனவுகள் நனவாகும் புதிய யுகத்தின் உதயத்துடன், 2025 புத்தாண்டில் இலங்கையர்களாகிய நாம் அடியெடுத்துவைக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய நான்கு திசைகளையும் இணைத்து அனைத்து மக்களின் நம்பிக்கையையும் பெற்று 2024ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்களம்மால்

7

## முன்னேற்றமடையும் உறுதியோடு 2025இல் காலடி எடுத்துவைப்போம்

### பிரதமரின் புத்தாண்டு வாழ்த்துச்செய்தி

முன்னேற்றமடையும் உறுதியுடன் அனைவரும் 2025ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்க நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன் என்று புதுவருட வாழ்த்துச் செய்தியில் பிரதமர் ஹரிணி தெரிவித்துள்ளார்.

பொறுப்பு வாய்ந்த ஆளும்தரப்பு என்ற அடிப்படையில் பொருளாதாரம் தொழிற்துறை மற்றும் கல்வி உள்ளிட்ட பல்வேறு முக்கிய துறைகளின் ஊடாக நாட்டை கட்டியெழுப்புவதில் நாம் கடமைப்பட்டுள்ளோம். ஒவ்வொரு பிரஜையும் இனம், பாலினம் அல்லது மதம் என்ற பேதங்களைக் கடந்து அமைதியான, சுதந்திரமான, கண்ணியமான

7

## பொலிஸின் சமூக ஊடக கணக்குகள் மீது திடீர் சைபர் தாக்குதல்; பலவும் மீட்டெடுப்பு

இலங்கை காவல்துறையின் யூடியூப் சேனல் உட்பட பல உத்தியோகபூர்வ சமூக ஊடக கணக்குகள் மீதான சைபர் தாக்குதல் தொடர்பான சமீபத்திய நிலைமை குறித்து பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கை காவல்துறையின் உத்தியோகபூர்வ -முகப்புத்தகம், ரிக்ரொக், இன்ஸ்டாகிராம், யூரியூப் (யூடியூப் சேனல்), வாட்ஸ்அப் சேனல், ஜூம், ஸ்பீச் - வீஎன்ன) மற்றும் எக்ஸ் கணக்குகள் டிசெம்பர் 30 அன்று மாலை சைபர் தாக்குதலுக்கு உள்ளானது.

உத்தியோகபூர்வ இணைய

7

## இன, மதக் கருத்துக்களால் பிளவுபட்ட அரசியல் மீள தலைதூக்காதிருக்கட்டும்

### எதிர்க் கட்சித் தலைவர் புத்தாண்டு வாழ்த்து

கடந்த காலத்தைப் போல குறுகிய இன, மத கருத்துக்களால் பிளவுபட்ட அரசியல் திட்டங்கள் மீண்டும் தலைதூக்காமல் இருப்பது மிக முக்கியம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

மாற்றத்திற்காக" எதனையும் செய்யவில்லை என்கிற குற்றச்சாட்டுக்கள் உண்டு. ரணில் – ராஜபக்சக்களின்வழியிலேயேஇந்தஆட்சியும் பயணிக்கின்றது, மாற்றம்ஏதுமில்லைஎன்கிற குற்றச்சாட்டும் உண்டு. இந்த நிலையில் ஜேவிபி நீண்ட காலமாக அரசியல் செய்து வந்த பிரகீத் எக்னொலிகொட பற்றிய தகவல் ஒன்று இப்போது வெளியே வந்திருக்கின்றது. தமிழ் இனப் படுகொலை குறித்தோ, தமிழர்களுக்கு எதிராக அரச படையினர் புரிந்த மனித உரிமை மீறல்கள் குறித்தோ எந்தவிதவிசாரணைகளையும்மேற்கொண்டு தமது படையினரைக் காட்டிக்கொடுக்க மாட்டோம் என்று திட்டவட்டமாகக் கூறிவரும் அநுரகுமாரவின் ஆட்சி, இப்போது எக்னொலிகொட அரச படையினரால் கொல்லப்பட்டார்என்றுகூறப்படுவதுதொடர்பில் எத்தகைய விசாரணைகளை நடத்தப் போகின்றது என்பதை நாடே கவனமாக, அதிலும் தமிழர்கள் மிகக் கவனமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

பிரகீத் எக்னொலிகொட, பத்திரிகையாளர், கேலிச் சித்திரக் கலைஞர். போர்க் காலத்தில் சிங்களமாற்றுச்சிந்தனையாளர்கள்வரிசையில் முன்னணியில் இருந்தவர். ஒரு காலத்தில் சிங்களப் போராளியாகவும் இருந்தவர். போர் தீவிரம் பெற்றிருந்த காலத்தில், கோட்டாபய ராஜபக்ச பாதுகாப்புச் செயலராக இருந்த காலத்தில் அவர் காணாமலாக்கப்பட்டார். அவரைக் கண்டுபிடிக்கக்கோரி அவரது மனைவி இரண்டு தசாப்தங்களாகத் தொடர்ந்து போராடி வருகின்றார். ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வரைக்கும் அவரது போராட்டம் விரிந்து பரந்திருந்தது.

இப்போது பிரகீத் எக்னலிகொட தொடர்பில் இலங்கை கடற்படையின் முன்னாள் படையினர் ஒருவர் திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளார்.

படையினரின் ஒரு பிரிவினரால் கடத்தப்பட்டார்என்றுநம்பப்படும்எக்னலிகொட கொல்லப்பட்டு மட்டக்களப்பு எருமைத் தீவில் இரகசியமாகப் புதைக்கப்பட்டடார் என்று அந்தக் கடற்படைச் சிப்பாய் யூரியூப் அலைவரிசை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருக்கிறார்.

ஊடகவியலாளர் சுத்தந்த திலகசிறி தொகுத்து வழங்கிய சிங்கள மொழி யூடியூப் சேனலான 'சுதா கிரியேஷன்ஸ்' நேரலை நேர்காணலின்போது தன்னை 'பிரியசாந்த' என அடையாளப்படுத்திக் கொண்ட சிப்பாய் எக்னொலிகொட தொடர்பில் தனக்குத் தெரிந்தவற்றைப் பகிர்ந்து கொண்டார்.

ஞாயிற்றுக்கிழமை இந்த நேர்காணல் வெளியானது, எக்னலிகொடவுக்கு என்ன நடந்தது என்று அவர் அந்த நேர்காணலில் கூறுகின்றார். ஆனால் ஆதாரங்கள் எவற்றையும் அவர் முன்வைக்கவில்லை.

பிரியசாந்தவின் கூற்றுப்படி முன்னர் இலங்கை கடற்படையின் திருகோணமலை தளத்தில் இயந்திரவியல் பிரிவில் பணியாற்றினார், ஒழுக்காற்றுநடவடிக்கையாக மட்டக்களப்பில் உள்ள கடற்படைத் தளத்திற்கு அவர் இடமாற்றப்பட்டிருந்தார்.

அங்கு தான், எக்னலிகொட கடத்தலில் தன்னை அறியாமலேயே ஈடுபடுத்தப்பட்டதாக அவர் குற்றஞ் சாட்டினார். கடத்தப்பட்டவர் ஒரு ஊடகவியலாளர் என்பது தனக்குத் தெரியாது என்றும் அவர் கூறினார்.

கடத்தப்பட்ட எக்னலிகொட முதலில் மட்டக்களப்பு கடற்படை முகாமிற்கு கொண்டு வரப்பட்ட பின்னர் படகு மூலம் எருமை தீவிற்கு கொண்டு செல்லப்பட்டார் என்று அவர் கூறுகின்றார்.

ஒரு மூத்த அதிகாரியின் நேரடி உத்தரவின் பேரில் நடந்த முழு சோதனையையும் அவர் நேரில் பார்த்தார் என்றும் கூறினார். எக்னொலிகொடவிற்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது என்றும் 'ரில்வான்' என அடையாளம் காணப்பட்ட ஒரு சிப்பாய் எக்னொலிகொடவின்தலையில்மூன்றுமுறை சுட்டார் என்றும் இதனால் அவர் உடனடியாக இறந்தார் என்றும் பிரியசாந்த தெரிவித்தார்.

எக்னொலிகொடவின் உடல் பின்னர் தீவில் அடக்கம் செய்யப்பட்டது. சிறிது நேரம் கழித்து, ரில்வானே ஒரு வாகன விபத்தில் மர்மமான சூழ்நிலையில் இறந்தார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எக்னலிகொட கொலை செய்யப்பட்டார் என்பதுமட்டுமல்லாமல், அவரதுபுதைக்கப்பட்ட இடத்தின் பெயரையும் கூறியது போன்ற ஒரு விரிவான சாட்சியம் வெளிப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

பிரகீத் எக்னலிகொட ஜனவரி 24, 2010 அன்று காணாமல்போனார். அதன் பின்னர், பல்வேறு விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் அவர் கடத்தப்பட்டதன் பின்னணியில் உள்ள உண்மையை வெளிக்கொணர முயன்றன. ஆனால் முடிவு எதுவுமில்லை. அவர் எங்கிருக்கிறார் என்பதற்கான உறுதியான சான்றுகள் மழுப்பலாகவே உள்ளன.

ஜேவிபியையும்தேசியமக்கள்சக்தியையும் பொறுத்தவரையில் தமிழர்களுக்கு எதிரான போரை அவர்கள் முழு மனதோடு முற்றுமுழுதாக ஆதரித்தவர்கள். அதனால் அந்தப் போரில் நிகழ்ந்த குற்றங்களுக்காக யாரையும் தண்டிக்க முடியாது என்பதே நிலைப்பாடு. எக்னொலிகொட விடயத்தில் இறந்தவர் சிங்களவர், அவரைப் படுகொலை செய்தவர்களும் சிங்களவர்களே என்று இப்போது சாட்சி முன்வைக்கப்படுகின்றது. இந்த விடயத்திலும் போரில் நடந்தவைகள் என்பதால் யாரையும் தண்டிக்க முடியாது என்று நழுவிச் செல்லுமா ஆளும்தரப்பு?

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## அதிகாரவெறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

2022ஆம் ஆண்டு போராட்டம் என்ற உள்ளக மக்கள் அமைதியின்மை எற்பட்டது. போராட்டக்காரர்களை கட்டுப்படுத்தவதற்காக இராணுவத்தினருக்கு தளபதி என்றவகையில் ஆகக்குறைந்த உத்தரவுகளைவழங்கினேன். இராணுவதுப்பாகியின்ரவையினால்சாதாரண குடிமகன் ஒருவரின் உயிர் பலியாகக் கூடாது என்று நான் பிரார்த்தனை செய்தேன்.

நிராயுதபாணியான மக்களுக்கு எதிராக உத்தியோகபூர்வமான அதிகாரத்தினால் கொலையாளிகாக மாறுவதற்கு நான் ஒருபோதும் விரும்பவில்லை. அதன் பிரதிபலனாக நாடு ஒரு நரகமாக மாறக்கூடாது என்றும் நினைத்தேன்.

நாட்டுக்கு அண்மித்த நாடுகளில் மக்கள் போராட்டங்களை ஒடுக்குவதற்காக மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் விளைவுகளைஅதற்கானஉதாரணங்களாகச் சுட்டிக்காட்டலாம். அதிகார ஆசைகொண்ட ஆட்சியாளர்கள் கூறுவதைப்போன்று தேசத்துரோகத்தின்எந்தவொருஉள்நோக்கமும் என்னிடமில்லை.

வெளிநாடுகளின் கைக்கூலியாகவோ, வெளிநாட்டுத்தூதரகமொன்றின் செல்லப்பிள்ளையாகவோ இருக்க வேண்டுமென்ற தாழ்வு மனப்பான்மை எனக்கு இல்லை. அவ்வாறாயின் அவ்வேளையில் ஐந்தாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகவும் கடமையாற்றிய பிரதமரைஆர்ப்பாட்டகளத்துக்குகொண்டுவந்து அவர்உயிர்அச்சுறுத்தலைஎதிர்கொண்டபோது ஏயார் மொபைல் படையணியைக் கொண்டு அவரது உயிரை எதற்காகப் பாதுகாத்தேன்?

அரசியல்வாதிகளின் வீடுகளை தீ வைப்பதற்கு வந்த ஆர்ப்பாட்டக்காரர்களில் பெரும்பாலானவர்களை விரட்டி அந்த வீடுகளை ஏன் பாதுகாத்தேன்?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் அரச நிர்வாக அதிகாரிகளின் பார்வையானது தனக்குப் பாதகமாக அமைந்துள்ளதாகவும்அவர் குறிப்பிட்டுள்ளார்.

நான்கு நட்சத்திர ஜெனரல் ஒருவராக இலங்கை இராணுவத்தின் இரண்டாவது தளபதியாகச் சேவையில் ஈடுபட்டிருந்த போது 2022 மே 31 சேவையில் இருந்து ஓய்வு பெறுவதற்குஏழுமாதங்கள்எஞ்சியிருந்தபோது, இராணுவத்தளபதிபதவியிலிருந்துபாதுகாப்புப் படைகளின்பிரதானிபதவிக்குமாற்றப்பட்டேன். குறித்த காலத்திலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு நாட்டிலிருந்து தப்பிச் செல்ல வேண்டியேற்பட்டது.

நான் இராணுவத் தளபதி பதவியிலிருந்து விடுபட்டு பாதுகாப்பு படைகளின் தலைமைப் பதவியில் இருக்கும்போதுதான் அது நடைபெற்றது. ஆளும்தரப்பின் அனுமதியுடன் வெளிநாட்டில் தேசிய மாநாட்டில் கலந்துகொண்டிருந்தபோதுதான் அது நடைபெற்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்

அத்துடன் நாளை நாட்டுக்கு சூரியன் எவ்வாறு உதயமாகும் என்று பார்க்கும்போது விவரிக்க முடியாதவொரு உணர்ச்சிப் பிரவாகம் என் இதயத்தில் உருவாகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

# ஊடகத் தணிக்கைக்கு திட்டம் ஏதுமேயில்லை

## அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்

ஊடகங்களுக்கு தணிக்கை விதிக்கும் எண்ணம் புதிய அரசாங்கத்திற்கு இல்லை என சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர், வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்

இலங்கைஇலத்திரனியல்ஒலிபரப்பாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் ஊடக அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தமது கருத்துகள் மற்றும் முன்மொழிவுகளை அமைச்சரிடம் முன்வைப்பதற்கும் பல கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்குமான நோக்கில் இலங்கை இலத்திரனியல் ஒலிபரப்பாளர்கள்சங்கம்விடுத்தகோரிக்கைக்கு அமைவாக இந்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சங்கத்தை பாதிக்கும் வகையில் தற்போது வரைவுசெய்யப்பட்டுள்ள சட்டமூலம் மற்றும் நடைமுறையிலுள்ள சட்டங்களில் உள்ள சில குறைபாடுகள் தொடர்பில் அமைச்சருக்கு இதன்போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஊடகங்களும் ஆளும்தரப்பும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டுமென அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

மக்களுக்காக ஊடகங்களை முறையாக நிர்வகிக்கும் பொறுப்பை ஆளும்தரப்பு நிறைவேற்றுவதாகவும் ஊடகங்கள் மீது தணிக்கை விதிக்கும் எண்ணம் ஆளும்தரப்புக்கு இல்லை எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் வெகுஜன ஊடக அமைச்சு பொறுப்பற்ற, செயலிழந்த இடமாக மாற்றப்பட்டுள்ளதால் வெகுஜன ஊடக அமைச்சை சரியான இடத்திற்கு கொண்டுசெல்வதே தற்போதைய அரசாங்கத்தின் முதன்மையான நோக்கம் என அமைச்சர் கூறினார்.

ஊடகங்கள் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் செயற்படக்கூடிய சூழலை உருவாக்கி ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை இலத்திரனியல் ஒலிபரப்பாளர்கள் சங்கத்தின் அதிகாரிகள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஊழல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டம் அமுல்படுத்திய பின்னர் குறித்த சட்டத்துக்கு அமைய புலனாய்வு, வழக்கு தாக்கல் செய்தல், நிர்வாக ரீதியான மற்றும் நீதிமன்ற ரீதியான செயற்பாடுகளை மேற்கொள்ளுவதில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுக்கு கணிசமான சட்ட ரீதியான பொருள்கோடல்கள் மற்றும் தொழில்நுட்ப பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. எனவே மேற்குறித்த சட்டத்தின் சில பிரிவுகளை திருத்தம் செய்வதற்கும் மற்றும் புதிதாக சில பிரிவுகளை அறிமுகம் செய்வதற்கு இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு முன்மொழிந்துள்ளது.

அதற்கமைய 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் ஏற்பாடுகளை ஆய்வுசெய்து கட்டாயமாக திருத்தம் செய்ய வேண்டிய பிரிவுகள் மற்றும் உள்ளடக்கப்பட வேண்டிய புதிய பிரிவுகள் தொடர்பான விதந்துரைகள் அடங்கிய விவரமான அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக ஆணைக்குழுவின் ஒரு ஆணையாளரின் தலைமையில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் சிரேஷ்ட அலுவலர்களை உள்ளடக்கிய குழுவை நியமிப்பதற்கு ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## இன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

அவர் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

நமது தாய்நாடு தற்போது எதிர்கொள்ளும் சவால்களை சரியாக அடையாளம் கண்டு, அவற்றை வெற்றிகொள்ளத் தேவையான ஆற்றல், வலிமை மற்றும் தொலைநோக்குடன் செயல்பட புது வருடத்தில் நாம் அனைவரும் உறுதி பூண வேண்டும். இலங்கை தேசத்தை கட்டியெழுப்புவதற்கான திட்டத்தை நாம் மேலும் வலுப்படுத்தவேண்டும்.

கடந்த காலத்தைப் போல குறுகிய இன, மத கருத்துக்களால் பிளவுபட்ட அரசியல் திட்டங்கள் மீண்டும் தலைதூக்காமல் இருப்பது மிக முக்கியம். அத்துடன் கடந்த நான்கு வருடங்களாக நாட்டு மக்கள் எதிர்கொண்ட நிச்சயமற்ற தன்மை, ஏமாற்றங்களை முடிவுக்கு கொண்டுவந்து, மக்கள் தாய்நாட்டில் தங்கியிருக்க ஏதுவான பொருளாதார, அரசியல், சமூக சூழலை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும்.

இதில் நாம் செய்ய வேண்டியது அமைதியின்மையை இல்லாதொழித்து நிம்மதியை வெற்றி பெறச்செய்வதற்கான பாதையை சரியாக தெளிவுபடுத்திக் கொள்வதாகும். நாட்டுமக்கள்எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியால் சிதைந்துள்ள வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப புதிய பொருளாதார திட்டமும் செயல்முறையும் தேவை என்பது மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது. எனவே நாட்டின் எதிர்காலத்திற்காக அரசியல், சமூக மற்றும் பொருளாதார முன்னெடுப்புகளை வலுப்படுத்த புது வருடத்தில் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சமஷ்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய அவர் இதனை தெரிவித்தார். இது தொடர்பில் சிவஞானம் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபை தேர்தலில் ஏற்கனவே இருப்பவர்களுக்கு மட்டும்தான் கட்சி வாய்ப்பு அளிக்கும்என்றகருத்துஇருப்பதால்கட்சியுடன் சேர்ந்து பணியாற்றுவதற்கு இளைஞர்கள் பலர் முன்வருவதில்லை என்று ஒரு தகவல் இருக்கிறது. ஆனால் மீளவும் புதிய தெரிவு இடம்பெற வாய்ப்புள்ளது.

இளைஞர்கள், பெண்கள் ஆகியோர் மூலக்கிளைகள் ஊடாக அங்கத்துவத்தைப் பெற்று இரண்டு வாரங்களுக்குள் கட்சியில் இணைந்துகொண்டால் கட்சி தீர்க்கமான நல்ல முடிவை எடுத்து ஆற்றலுள்ளவர்களை, கல்வி கற்றவர்களை, இளையோரை தெரிவு செய்யக்கூடிய சூழலை ஏற்படுத்தும் என்று நான் நினைக்கிறேன்.

வடக்குகிழக்குஇணைந்தமாகாணங்களில் கட்டமைப்பு ரீதியில் இயங்குவதுடன், எல்லா மாவட்டங்களிலும் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை கொண்டுள்ள கட்சியாக இலங்கை தமிழ் அரசுக் கட்சி மாத்திரமே காணப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றங்களில் அனுபவம் வாயந்த தலைமைத்துவம் வகித்தவர்கள் எங்களுடன் இருக்கின்றார்கள். ஆகவே அனைவரும் தமிழ் அரசுக் கட்சியுடன் அணிதிரள வேண்டும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வீட்டு வேலைகளுக்கு நாளொன்றுக்கு மட்டக்களப்பில் ரூ. 2,000 கொடுப்பனவு

## சம்பளப் பட்டியலை வெளியிட்டது சங்கம்

மட்டக்களப்பில் வீட்டுவேலை தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம் நாள் ஒன்றிற்கு 8மணித்தியாலத்திற்கு 2000 ரூபாவாக நிர்ணயித்து அது தொடர்பான சம்பளம் பட்டியல் ஒன்றை வீட்டு வேலை தொழிலாளர் சங்கம் நேற்று (செவ்வாய்க்கிழமை) வெளியிட்டு வைத்தது.

மட்டக்களப்பு டயஸ் லேனிலுள்ள வீட்டுவேலை தொழிலாளர் சங்க காரியாலயத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் சம்பளபட்டியலைச்சங்கசெயலாளர் மற்றும் உறுப்பினர்கள் வெளியிட்டுவைத்து இவ்வாறு தெரிவித்தனர்.

மாவட்டத்தில் 450 இற்கும் மேற்பட்ட வீட்டுவேலைதொழிலாளர்கள்சங்கஉறுப்பினர்களாக இருந்து வருகின்றனர் இந்த நிலையில் இந்த வீட்டுவேலை தொழிலாளர்களுக்குத் தொழில்வழங்குபவர்கள் ஒருவேலைக்குஅழைத்து ஏனைய வேலைகளை வாங்கிக் கொண்டு அவர்களின்உழைப்பிற்கு ஏற்ற சம்பளங்களை வழங்காது சாப்பாட்டு பொதியை வழங்கி அத்துடன் குறைந்த ஊதியத்தை வழங்கி அவர்களை அவமதித்து நடத்தி வருகின்றனர்.




இவ்வாறு வீட்டு வேலை தொழிலாளிகள்மிகவும்பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அவர்களின் உழைப்பிற்கு ஏற்ற சம்பளத்தைப் பெற்றுக் கொள்வதற்காகச் சம்பள பட்டியல் ஒன்றை நிர்ணயித்துள்ளோம் அதற்கமைய 8 மாணிநேர வேலைக்கு 2000 ரூபாவும், 4 மணித்தியால வேலைக்கு 1500 ரூபாவும், ஒருமணிநேர வேலைக்கு 500ரூபாவும், 8 மணித்தியாலயத்திற்கு மேல் வேலை செய்தால் ஒரு மணித்தியாலயத்திற்கு 250 ரூபாவும், தங்கி வேலை செய்வோருக்கு மாதாந்தம் 50 ஆயிரம் ரூபாவும் தொழில் வழங்குபவர்கள் வழங்கப்படவேண்டும்எனச்சம்பள பட்டியல் ஒன்றை நிர்ணயித்துஅதனைதுண்டுப்பிரசுரம் மூலமாக பொது இடங்களில் விநியோகிக்க உள்ளோம்.



எனவே எமது சங்கம் கண்டியை தலைமையுமாகக் கொண்டு பலமாவட்டங்களில் இயங்கி வருகின்றது. இந்த சங்கத்திலுள்ள வீட்டு வேலை தொழிலாளர்களின் உரிமை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேசெயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். எனவே இந்த சங்கத்தில் இணையாத வீட்டுவேலை தொழிலாளர்கள் இணைந்து கொள்ளமுடியும். - என்றனர்.

இதனையடுத்து சம்பள பட்டியல்துண்டுப் பிரசுரத்தை மண்முனை வடக்கு பிரதேச செயலாளரிடம் கையளித்து வெளியிட்டு வைத்த பின்னர் துண்டுப்பிரசுரங்களைப் பொதுமக்களிடம் விநியோகித்தனர்.

# நகரைச் சுத்தப்படுத்தும் தொழிலாளர்களுக்கு மதிப்பளித்த கல்முனை மெதடிஸ்த திருச்சபை

(ஷினாஸ்)

கல்முனைமாநகரசபையின்கீழ்பணியாற்றும் நகர சுத்திகரிப்பாளர்களை அழைத்து அவர்களுக்கு மாலை அணிவித்து பரிசும் வழங்கி பாராட்டி கௌரவப்படுத்திய நிகழ்வு கல்முனை மெதடிஸ்த திருச்சபை ஆலய மண்டபத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது.

கல்முனை மெதடிஸ்த திருச்சபை ஒழுங்குபடுத்தி ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில், மாநகர சபையின் கீழ் பணியாற்றும் 80 சுத்திகரிப்பாளர்கள் நத்தார் சிறப்பு பரிசுப் பொதிகள் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள். இந்த நிகழ்வுக்கு கல்முனை வடக்கு பிரதேச செயலாளர்



ரி.ஜே.அதிசயராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சுத்திகரிப்பு தொழிலில் ஈடுபடும்



ஊழியர்களுக்கு விசேட பரிசுப் பொதியை வழங்கி பாராட்டி கௌரவித்தார்.

இதில் பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் ஏ. அமலதாஸ், கல்முனை வடக்குஆதாரவைத்தியசாலையின்சிறுபிள்ளை வைத்திய நிபுணர் வைத்தியா ரோஷந்த், திருச்சபையின் அருள் சகோதரி சுலோஜினி, அருள் சகோதரி அதிர்ஷ்டவதி கல்லாறு சேகர முகாமை குழு அருள்திரு திருமறை தாசன் போதகர் உட்பட திருச்சபையின் உக்கிரான காரர்கள், வழிகாட்டிகள், திருச்சபை மக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வின் போது திருச்சபையின் ஞாயிறு மாணவர்கள், பாடல் குழுவினர் ஆகியோரால் கலாசார நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.

# திருமலையில் நேற்றுக் காலையில் கரை ஒதுங்கிய பெண்ணின் சடலம்

திருகோணமலை தலைமையக பொலிஸ்பிரிவுக்குட்பட்ட குவாட்லூரப் தேவாலயத்திற்கு பின்புறமாகவுள்ள கடற்கரைப் பகுதியில் நேற்று (செவ்வாய்க்கிழமை)காலைபெண்ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளதாக பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

குறித்தசடலம்நீர்கொழும்பு தங்கொட்டுவ பகுதியைச் சேர்ந்த 86 வயதுடைய பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த கடற்கரையின் ஓரமாக கைப் பையும் ஆடைகளுடன்கூடிய பயணப்பையும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவர் திருமணமாகாதவர் எனவும் தெரிய வருகின்றது.

குறித்த சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை திருகோணமலைதலைமையகபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# திருகோணமலையில் கரை ஒதுங்கிய மிதவைப் படகு

திருகோணமலை கடற்பரப்பில் பௌத்த கொடிகளைத் தாங்கியவாறு வெறுமையான மிதவைப் படகு ஒன்று திங்கட்கிழமை இரவு கரை ஒதுங்கியுள்ளது. குறித்த மிதவை படகு காணப்பட்ட புத்தகம் மற்றும் எழுத்துக்களை வைத்து அதுமியன்மாரில்இருந்துவந்திருக்கலாம் என சந்தேகிக்கின்றனர்.

இந்நிலையில்வாழைச்சேனைகடற்பரப்பிலும் நேற்று இதைவிட நீளமான மிதவைப் படகு ஒன்றும் கரை ஒதுங்கியுள்ளது.

இந்த படகில் சமைத்து சாப்பிட்டதற்கான அடுப்புகள்மற்றும்பாத்திரங்கள்காணப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மியன்மாரில் இருந்து 115 பேருடன் வருகை தந்த படகு ஒன்று கடந்த 19ஆம் திகதி முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் கரை ஒதுங்கியிருந்தது. இதில் வந்த அகதிகள் தாம் 3 படகில் வந்ததாகவும் இடைநடுவில் இரண்டு பழுதடைந்ததாகவும் குறிப்பிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழர்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யட்டும் புத்தாண்டு

**புத்தாண்டு பிறந்திருக்கின்றது. இலங்கை மாற்றத்திற்கான நுழைவாயிலில் நின்றிருக்கின்றது. ஒரு முழுமையான "முறைமை மாற்றத்தை" எதிர்பார்த்து மக்கள் வாக்களித்து, இலங்கை வரலாற்றில் இல்லாத வகையில் தேசிய மக்கள் சக்தியை ஆட்சியில் அமரவைத்துள்ளார். இந்த ஆட்சியின் மீது அவர்களுக்கு பெரும் எதிர்பார்ப்புள்ளது.**

**அதிகாரத்திற்கு வந்து மிகக் குறுகிய காலத்திலேயே இந்த ஆளும்தரப்பும் இதற்கு முந்தைய ஆளும் தரப்புகளின் தடத்திலேயே பயணிக்கின்றது, குறிப்பாக ரணில் – ராஜபக்சக்கள் போட்டுவைத்த தடத்திலேயே பயணிக்கின்றது என்கிற குற்றச்சாட்–டு ஒ–ருபுறமும் யதார்த்தத்தைப்புரிந்துகொண்டுஅவ்வாறுசெயற்படுவதே சிறந்தது என்கிற பாராட்டு ஒருபுறமுமாக, கடும் விமர்சனத்தை எதிர்கொண்டுள்ளது.**

**இந்த விமர்சனங்களுக்கெல்லாம் பதிலாகவும் முறைமை மாற்றத்திற்கான வழியாகவும் கிராமிய வறுமையை ஒழித்தல், 'தூய சிறீலங்கா' திட்டம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் ஆகியவற்றை முன்வைத்துள்ளார் நாட்டின் தலைவர் அநுரகுமார திசநாயக்க. இதில் வறுமையை ஒழித்தல் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் என்பவை முன்னைய ஆட்சியாளர்களின் திட்டங்களின் தொடர்ச்சியே. 'தூய சிறீலங்கா' திட்டமே தேசிய மக்கள் சக்திக்குரியது. ஏற்கனவே இருக்கும் அரச பொறிமுறைக்குள் அதன் செயற்றிறன் எத்தகையது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.**

**அதற்கு மேலாக இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஆளும்தரப்பின் முதன்மைப் பட்டியலில் இருந்து விலகியிருப்பது தமிழர்களைப் பொறுத்தவரையில் கவலைக்குரியது. புதிய அரசமைப்பு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று தேசிய மக்கள் சக்தி சொன்னாலும், அந்தத் தீர்வு எத்தகையது என்பதில்ஆளும்தரப்புக்குளந்தத்திட்டவட்டமானவடிவமும் வழிவரைபடமும் கிடையாது என்பது தெரிகிறது. தீர்வாக எதை முன்வைப்பது என்பதிலும் ஆளும் தரப்பாகவும் கட்சியாகவும் அவர்களுக்குத் தெளிவில்லை என்பதும் உணரப்படுகின்றது. தமிழர்களைப் பொறுத்தவரையில் இது நல்ல செய்தியல்ல. இந்தப் புத்தாண்டில் அவர்கள் கேட்க விரும்பிய செய்தியுமல்ல.**

**பொருளாதார விடுதலை, மறுமலர்ச்சி தமிழர்களின் பிரச்சினைக்கும் தீர்வாக அமையும் என்பதும் ராஜபக்சக்களின் பழைய அணுகுமுறைதான். ''முறைமை மாற்றத்தின்'' கீழ் தமிழர்கள் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பிடம் இருந்து அதனை எதிர்பார்க்கவில்லை. இனப்பிரச்சினைக்குநிரந்தரமான தீர்வு காணப்படாமல் முழுமையான பொருளாதார மறுமலர்ச்சியை இலங்கையால் எட்டமுடியாது என்று தமிழர்கள் நம்பும் நிலையில், அரசியல் தீர்வே எல்லாவற்றுக்கும் முதன்மையானது, அதுவே பொருளாதார மறுமலர்ச்சிக்கான உரிய சமிக்ஞை என்று அவர்கள் கருதுகின்றார்கள். எனவே பிறக்கின்ற புதிய புத்தாண்டில் புதுய அரசமைப்பு குறித்த ஆளும் தரப்பின் நகர்வுகளைப் பார்ப்பதற்கு அவர்கள் ஆவலோடு காத்திருக்கின்றார்கள். அவர்களின் ஆசையை, விருப்பத்தை, தீர்வுக்கான அவாவை நிறைவேற்றுகின்ற ஆண்டாக இந்த 2025 புத்தாண்டு மலரட்டும்.**

# 2025இல் எப்படி இருக்கும் உலகம்?

**காமினி அக்மீமன்**

*ஆண்டு முடிவடையும் போது திரும்பிப் பார்ப்பது நடந்து முடிந்த கணக்கு வழக்கை தொகுத்துப் பார்ப்பது எப்போதுமே நல்லதுதான், அப்படிப் பார்க்கும்போது அது நமக்கு ஒரு நல்ல உணர்வைத் தரவேண்டும், உயிர் பிழைத்தது மட்டுமே நிம்மதி என்று இருக்கக்கூடாது. ஆனால் பின்னோக்கிப் பார்க்கும்போது 2024 பயங்கரமானதாகத் தெரிகிறது, உலகின் பெரும்பகுதி கொந்தளிப்பில் கிடந்தது புரிகின்றது.*

*இரண்டு முக்கிய போர்கள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. ஒன்று ரஷ்யா - உக்ரைன் இடையிலான போர். இதை மேற்கு மற்றும் நேட்டோவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான போர் என்று கூறினாலும் தகும். அணு ஆயுதப் பதலடி தரப்படும் என்கிற எச்சரிக்கையுடன் இந்தப் போர் தொடர்கின்றது.*

*அடுத்தது காஸாவில் முடிவேயில்லாமல் தொடரும்போர்,இதைப்போர்என்பதைவிட ஒருதலைப்பட்சமான படுகொலைகள் என்றுதான் விவரிக்கவேண்டியிருக்கும் என்பது மனதை உருக்கும் சோகம். 10 டிசம்பர் 2024 நிலவரப்படி, 46,000 க்கும் மேற்பட்ட மக்கள் (44,786 பாலஸ்தீனியர்கள் மற்றும் 1,706 இஸ்ரேலியர்கள்)- கொல்லப்பட்டுள்ளனர், காசாவில் பெரும் உணவு மற்றும் மருந்துப் பற்றாக்குறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. குழந்தைகள் குளிரால் உயிரிழந்துகொண்டிருக்கின்றனர்.*

*நீண்ட காலமாகத் துன்பங்களை மட்டுமே அனுபவிக்கும் சிரிய மக்கள், தற்போது அதிகாரத்தைப் பிடித்திருக்கும் மோசமான இஸ்லாமிய ''விடுதலையாளர்''களின் ஆட்சியில் இன்னும் இருண்ட எதிர்காலத்தை நோக்கி நகரக்கூடும். இஸ்ரேல் மற்றும் துருக்கி போன்ற பலம்வாய்ந்த அண்டை நாடுகளுக்கு இடையே சிரியாவின் வளங்கள் பங்கிடப்படும் அச்சத்திற்கு நடுவே அதன் எதிர்காலம் இருண்டு கிடக்கிறது.*

*மேற்கு ஐரோப்பாவின் (ஐரோப்பிய ஒன்றியம்) பொருளாதாரம் சிக்கலில் உள்ளது, அதன் மிகப்பெரிய அதிகார மையமான ஜேர்மனி, திவால்நிலையை எதிர்கொள்கிறது மற்றும் அதன் வலிமைமிக்க கார் தொழில்துறை ஆழ்ந்த சிக்கலில் உள்ளது. பிரிட்டன் மற்றும் பிரான்சும்கூட, பொருளாதாரச் சரிவு மற்றும் வறுமையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன, அதேநேரத்தில் பொதுவாக வளமான நோர்டிக் நாடுகள் புலம்பெயர்ந்தோருக்கு மிகவும் விரோதமாகி, தங்கள் பாரம்பரிய சகிப்புத்தன்மையை இழந்துவிட்டன. மேற்கு ஐரோப்பா முழுவதும் குடியேறுபவர்களுக்கு 'ஐரோப்பிய கோட்டை' கதவுகள் மூடப்பட்டுவிட்டன.*

*சீனாவும் இந்தியாவும் அதிக பொருளாதார வளர்ச்சியைக் காட்டுகின்றன, ஆனால் இந்த இரண்டு விரோத நாடுகளுக்கு இடையே பதற்றங்கள் உள்ளன. முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் ஊழல் ஆளும்தரப்பை விரட்டியடித்து அமைதியான மக்கள் புரட்சியை பங்களாதேஷ் வென்றது, ஆனால் இன்னும் அரசியல் உறுதிப்பாட்டையும் நிலையான ஆளும்தரப்பையும் அதனால் அடைய முடியவில்லை.*

*பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் சிறையில் அடைக்கப்பட்டதால் அந்த நாட்டுப் பொருளாதாரச் சிக்கலும் அரசியலும் கொந்தளிப்பில் உள்ளது, இம்ரான் மீது சுமத்தப்பட்டவை 'கொடுமையான குற்றச்சாட்டுகள்' என்று அவரது ஆதரவாளர்கள் அழைக்கிறார்கள். மிகவும் வெறுக்கப்பட்ட இராணுவ ஆட்சியாளர்களுக்கும், துன்புறுத்தப்பட்ட குடிமக்களுக்கும் இடையே மியான்மர் ஒரு கடுமையான உள்நாட்டுப் போரை எதிர்கொள்கிறது.*

*அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் நிழலில் இருந்த இந்த உலகத்தால் தப்ப முடியப்போவதில்லை, அவரது கடுமையான மற்றும் கணிக்க முடியாத கொள்கைகளால் அமெரிக்கர்களின் வாழ்க்கை மட்டுமல்ல, உலகம் முழுவதும் உள்ள மில்லியன் கணக்கான மக்களின் வாழ்க்கையையும் பாதிக்கப்படப் போகிறது.*

*டிரம்ப் ஒரு தனிமைப்படுத்துப்பட்டவர் என்று விவரிக்கப்படுகிறார், ஆனால் சில ஆய்வாளர்கள் அவரை கொள்ளையடிப்பவர் என்று அழைக்கிறார்கள், நானும் அந்தக் கருத்தை ஏற்கிறேன். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, அமெரிக்கா தனது நலன்களையும் உலகெங்கிலும் உள்ள அதன் நட்பு நாடுகளின் நலன்களையும் பாதுகாக்க வலுவான கூட்டணிகளை உருவாக்கியது. டொனால்ட் டிரம்ப் நட்பு நாடுகள் மற்றும் கூட்டணிகளை நம்பவில்லை (இது நேட்டோவுக்கான அச்சுறுத்தல்), மற்ற நாடுகள் அமெரிக்காவிற்கு கப்பம் செலுத்தவேண்டும் (செயலில், வார்த்தைகளில் மட்டும் அல்ல) என்றும் அவர் விரும்புகின்றார்.*

*அவர் இன்னும் வெள்ளை மாளிகைக்குள் நுழையவில்லை, ஆனால் பனாமா கால்வாயைத் திரும்பப் பெற விரும்புவதாகக் கூறி ஏற்கனவே எல்லோரையும் மிரள விட்டுள்ளார். 1977 ஆம் ஆண்டில், அப்போதைய ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் பனாமாவுடன் ஒரு வரலாற்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார், இதன் மூலம் இந்த முக்கியமான நீர்வழிப் பாதைக்கான அனைத்து உரிமைகளும் அந்த நாட்டிற்கு வழங்கப்பட்டன. இப்போது, டிரம்ப் அதை திரும்பப் பெற விரும்புகிறார்.*

*அதுமட்டுமின்றி கனடாவை அமெரிக்காவின் இன்னொரு மாகாணம் என்கிறார். கனேடிய பிரதமர் பியர் ட்ரூடோவை 'கவர்னர் ட்ரூடோ' என்று அழைக்கிறார், இது முற்றிலும் அவமானகரமானது. மெக்சிகோ மீது 'மென்மையான' படையெடுப்பையும் அவர் பரிந்துரைத்துள்ளார். கடைசியாக 1848ஆம் ஆண்டு மெக்ஸிகோ மீது அமெரிக்கா படையெடுத்தது, டெக்சாஸ் மாநிலம் உட்பட கணிசமான அளவு மெக்சிகோ பிரதேசம் அந்தப் போர் மூலம் அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டது.*

*இந்த வரலாறு மீண்டும் வராமல் போகலாம். பனாமா கால்வாய் பனாமாவின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடும், மேலும் மெக்சிகோ மீது மென்மையான அல்லது கடினமான படையெடுப்பு எதுவும் இருக்காது. ஆனால் ட்ரம்ப் எதிர்காலத்திற்கான தொனி இப்படித்தான் இருக்கின்றது, மேலும் இது போர்க்குணம் மிக்கதாக இருக்கின்றது பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் அமெரிக்கா போன்ற காலனித்துவ சக்திகளின் 19 ஆம் நூற்றாண்டின் 'துப்பாக்கி இராஜதந்திரத்தை' திரும்பப் பெறுவதை நினைவூட்டுகின்றது. டிரம்பின் கீழ், அமெரிக்கா சிறிய நாடுகளை கொடுமைப்படுத்த அதிக வாய்ப்பு உள்ளது, மேலும் அதில் மேற்கு ஐரோப்பாவும் அடங்கும், டிரம்பின் வரி விதிப்பு எச்சரிக்கைகள் அதற்குக் கட்டியங் கூறுகின்றன.*

*இத்தகைய கைகளை முறுக்கும் தந்திரங்களுக்கு 19 ஆம் நூற்றாண்டிலேயே சீனா பலியாகிவிட்டது, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் 'ஒரு நூற்றாண்டு அவமானத்தை' பற்றி பேசியுள்ளார். சீனா ஒரு உலகளாவிய சக்தி மற்றும் பொருளாதார ஜாம்பவான் என்பதை இப்போது கவனிக்கத் தவறக்கூடாது. சீனா தற்போது போரைவிட வர்த்தகத்தில் அதிக அக்கறை கொண்டுள்ளது. ஆனால் பெய்ஜிங் தனது இராணுவ சக்தியை வேகமாக விரிவுபடுத்துகிறது, மேலும் உலகின் மிகப்பெரிய, விமானம் தாங்கி தரையிறக்கக் கப்பலை அறிமுகப்படுத்தப்போவதாக அறிவித்துள்ளது.*

*ஒரு ஆய்வாளர் குறிப்பிட்டது போல்,*

காலைக்கதிர் Kalaikkathir

# 2025இல்......

4ம் பக்கத் தொடர்ச்சி..........

அமெரிக்காவிற்கு உலகம் முழுவதும் இராணுவ மற்றும் கடற்படை தளங்கள் இருக்கும்போது, சீனா தனது சொந்த கொல்லைப்புறமாக இருக்கும் தென் சீனக் கடலில் மட்டுமே தனது தசைகளை நெகிழச்செய்கிறது. ஆனால் இவை அனைத்தும் பதற்றமானவை, மேலும் தைவான் பிரச்சினை முள்ளாகவும் நிலையற்றதாகவும் உள்ளதையும் கவனிக்க வேண்டும்.

இதற்கிடையில், சீனாவின் பொருளாதார விரிவாக்கம் ஏற்கனவே அமெரிக்காவிற்கு சீன வாகன ஏற்றுமதி மீது விதிக்கப்பட்ட வரிகளால் பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு தசாப்தத்திற்கு முன்பு, சீன கார் தொழில் பெரிதாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆனால் மின் வாகனங்கள் தான் எதிர்காலம் என்று கருதிய சீன ஆளும்தரப்பு அதன் கார் தயாரிப்பாளர்களுக்கு மானியம் வழங்கியது. சீனா இப்போது முன்னணியில் இருப்பது வாகனங்களில் மட்டுமல்ல, பற்றறிகள் போன்ற மின்வாகனப் பாகங்களிலும்தான். பற்றறி உற்பத்தியாளர்களுக்கு இன்றியமையாத லித்தியத்தின் மீது சீனா ஏகபோக உரிமையைக் கொண்டுள்ளது. மற்ற அனைத்து மின் வாகன உற்பத்தியாளர்களும் சீனாவிலிருந்தே பற்றறிகளை வாங்கவேண்டும்.

அமெரிக்காவும் மின்வாகனப் பந்தயத்தில் இருந்தது, ஆனால் அமெரிக்க மின்வாகனங்கள் மிகவும் விலை உயர்ந்தவை. இந்தச் சவாலை எதிர்கொள்வதற்கான ஜனாதிபதி ஜோ பிடனின் பதில் சீன வாகனங்கள் மீது வரிகளை விதிக்கவேண்டும் என்பதாகத்தான் இருந்தது, இதன் விளைவாக அமெரிக்காவில் சீன மின்வாகன விற்பனை வியத்தகு அளவில் குறைந்தது. டொனால்ட் டிரம்ப் சீனாவுடன் இன்னும் பெரிய வரிப் போரை நடத்த விரும்புகிறார்.

ஜப்பானும் சீனாவை ஒரு போட்டியாகவும் அச்சுறுத்தலாகவும் பார்க்கிறது. ஜப்பானின் மாபெரும் வாகன உற்பத்தியாளர் நிசான் திவால் நிலையை எதிர்கொண்டது மற்றும் ரெனால்ட் வெளியேறிய பிறகு ஒரு கூட்டாளரைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டது. சீன பங்குதாரருக்குப் பதிலாக, நிசான் ஹோண்டாவுடன் இணைவதாக அறிவித்தது, சீன வாகனங்களை ஜப்பானியர்கள் தமக்கான அச்சுறுத்தலாகக் கருதுவதால் இது மற்றொரு வர்த்தகப் போருக்கு வழிவகுக்கும்.

ஆபத்து என்னவென்றால், ஒரு வர்த்தகப் போர் டாங்கிகள், ஏவுகணைகள் மற்றும் கப்பல்களுடன் உண்மையான போராக மாறும். பெரும்பாலான காலனித்துவ போர்கள் பிற நாடுகளுடனான வர்த்தக மோதல்களை அடிப்படையாகக் கொண்டவையே.

இருப்பினும், 2025 இல் சிறந்ததாக இருக்கும் என்று நம்புவோம்.

# புத்தாண்டில் புதுப் பொலிவையும் புது வளர்ச்சியையும் புதுச்சவால்களை, புதுவெற்றிகளை எதிர்கொள்வோம்

## முன்னாள் எம்.பி ராமேஸ்வரன் தெரிவிப்பு

(கிஷாந்தன்)

புத்தாண்டில் புதுப் பொலிவை, புது வளர்ச்சியை, புதுச் சவால்களை, புது வெற்றிகளை எதிர்கொள்வோம் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளர், நிதி செயலாளரும், முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது புத்தாண்டுச் வாழ்த்து செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது –

பல்வேறு நம்பிக்கைகளுடன் இந்த புத்தாண்டை மக்கள் வரவேற்கின்றனர். அவர்களது நம்பிக்கையும் எதிர்பார்ப்புகளும் இப்புத்தாண்டில் நிறைவேற வேண்டும். மக்களுக்கு அனைத்து நலன்களும், வளங்களும் கிடைத்திட வேண்டும் என்பதுடன் பொருளாதார ரீதியான நெருக்கடிகள் தீர்ந்து மகிழ்ச்சி பெருகிட வேண்டும்.

பழைய ஆண்டு கற்றுத் தந்த பாடங்களில் இருந்து புதிய ஆண்டில் நாம் வாழ்வை செம்மைப்படுத்திக்கொள்ள வேண்டும். புதிய கனவுகளோடு, நம்பிக்கைகளோடு புத்தாண்டை வரவேற்போம்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளையும் அரசியல் தலைமைகளின் குறைகளையும் சுட்டிக்காட்டிக் கொண்டு காலத்தை வீணடிக்காமல் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை



அரசாங்கம் துரித கதியில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மலையக மக்கள் இவ் அரசாங்கத்தின் மீது பாரிய எதிர்பார்ப்பினை முன்வைத்து தனது வாக்குகளை அளித்துள்ளார்கள். மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைத்தல், அவர்களுக்கான கல்வி அபிவிருத்தி, காணி உரிமை என்பன அரசாங்கத்தால் உறுதி செய்யப்பட வேண்டும்.

அதற்கான தொடர் அழுத்தங்களை நாம் அனைத்து தரப்பினருடனும் இணைந்து வழங்குவோம். அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மலையக மக்கள் எண்ணங்கள் வண்ணங்களாய் மாறி இன்பம் நிறையும் இனிய வருடமாக மாறும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி வாழ்த்துச் செய்தி

(கிஷாந்தன்)

புதிய நம்பிக்கைகளுடன் மலர்கின்ற இந்த புத்தாண்டில் மக்கள் அனைவருக்கும் இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது புத்தாண்டுச் வாழ்த்து செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது –

மலையக மக்களின் நலன் கருதி புதிய அரசாங்கத்துடன், புதிய பாதையில் அணைவரும் ஓரணியில் பயணிப்போம்.

மக்கள் அனைவருக்கும் இந்தப் புத்தாண்டு, புதிய நம்பிக்கையையும், எழுச்சியையும், மலர்ச்சியையும், வளர்ச்சியையும் வழங்கும் ஆண்டாக மலரட்டும் .

அத்தோடு, மலையக மக்களின் எண்ணங்கள்



யாவும் வண்ணங்களாய் மாறி இன்பம் நிறையும் இனிய வருடமாக மாறும்.

மலரும் புத்தாண்டு நீங்காத வளங்களையும், நிறைவான மகிழ்ச்சி மற்றும் மன உறுதியை தரும் ஆண்டாக அமைந்திட மனமார்ந்த வாழ்த்துகள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மாயைகளை உணர்த்தும் ஆண்டாக 2025 புத்தாண்டு இனிதே மலரட்டும்

## முன்னாள் அமைச்சர் டக்ளஸ் வாழ்த்து

மாறுதல்கள் எதனையும் இதுவரை தந்துவிடாத மாற்றத்துடன் கடந்திடும் 2024 ஆம் ஆண்டிற்கு விடை கொடுத்து,

மாயைகளை உடைத்து யதார்த்தங்களை அடையாளம் காட்டும் ஆண்டாக அமைய புத்தாண்டை வரவேற்போம் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் புத்தாண்டு செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

'கொறோனா பெரும் தொற்றும் பொருளாதார நெருக்கடியும் ஏற்படுத்திய சுமைகளை சுமந்து கொண்டிருந்த மக்கள் மத்தியில் 'மாற்றம்' பற்றிய பேச்சுகள் தீயாய் பற்றிக் கொண்ட ஆண்டாக 2024 அமைந்திருந்தது.

வாக்குகளை வாரி அள்ளிக் கொள்ள இனவாதம் இனிமேலும் வசதியான ஆயுதம் அல்ல என்பதை உணர்ந்து கொண்டவர்கள், 'மாற்றம்' என்ற வார்த்தைக்கு மகுடம் சூட்டினார்கள்.

கழுத்தை நெரிக்கும் சுமைகளில் இருந்து மீள்வதற்கான 'ஒரு சந்தர்ப்பத்தினை கொடுத்துதான்



பாரப்போமே' என்ற பரிசோதனை முயற்சிக்கு எமது மக்களும் முன்வந்தமையினால் சில மாற்றங்களை 2024 எம் மத்தியில் பிரசவித்திருந்தது.

ஆனால், எமது மக்களை சித்திரவதை செய்யும் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு சரியான வழிமுறை என்று நாம் அடையாளப்படுத்தியவையும், முன்னெடுத்தவையுமே, யதார்த்தமான அணுகுமுறைகள் என்பதை தொடரும் சம்பவங்கள் அடுத்தடுத்து அம்பலப்படுத்தி வருன்றன.

எனவே, பிறந்திருக்கும் புதிய ஆண்டு, எம்மக்களை சூழ்ந்திருக்கும் மாயைகளை முழுமையாக உடைத்து, சரியானவர்களையும் சரியானவற்றையும் அடையாளம் காட்டும் என்ற நம்பிக்கையுடன், அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நம்பிக்கை நிறைந்த ஆண்டாகட்டும்

## ஜீவன் தொண்டமானின் புத்தாண்டு வாழ்த்து

(கேதீஸ்)

2025 ஆம் ஆண்டு நம்பிக்கை நிறைந்த ஆண்டாகத் திகழட்டும் மலையக மக்களின் தேவைகளிலும், அவர்களது முயற்சிகளிலும் நாம் கைகொடுப்போம் என இ.தொ.கா. பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் விடுத்துள்ள புது வருட வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

புதுவருட பிறப்பை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

பிறக்கின்ற ஒவ்வொரு புத்தாண்டும் மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் தரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஒவ்வொருவருக்குள்ளும் உண்டு. மலையக சமூகத்தின் மாற்றத்திற்காகவும், ஏற்றத்திற்காகவும் தம்மை அர்ப்பணித்திருக்கும் இ.தொ.கா எத்தனை சவால்களை எதிர்கொண்டாலும் இடைவிடாது மக்களுக்காக பாடுபடும்.எமது மலையக மக்கள் இடர்களை எதிர்கொள்ளும் போதும், சவால்களை சந்திக்கின்ற போதும் அரணாகப் பாதுகாத்து நின்று துயர்களையும் துடைத்து வந்திருக்கின்றோம்.

வரலாற்றுப் பணியை நாம் மேற்கொண்டிருப்பதை வரலாறு சான்றுபடுத்தும். இதன் காரணமாகவே, தெளிந்த சிந்தனையோடும். கொள்கைப்பற்றோடும் மக்கள் எம்பின்னால் அணிவகுத்து நிற்கின்றனர்.

இன்று எம்மக்கள் அனைவருக்கும் சலுகைகள், உரிமைகள், வசதி வாய்ப்புகள் என்பன, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அத்தனையும் அரசியல் சாணக்கியத்தாலும், தொழிற்சங்க போராட்டங்களாலும் பெறப்பட்டவை என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

2025 ஆம் ஆண்டு நம்பிக்கை வலுவூட்டும் ஆண்டாகவும். மலையக மக்களின் தேவைகளை நிறைவேற்ற வழிகாட்டும் ஆண்டாகவும் திகழ வேண்டும். இம்மக்களின் தேவைகளிலும், அவர்களது முயற்சிகளிலும் நாம் கைகொடுப்போம். புதிய ஆண்டில் மலையகமெங்கும் மகிழ்ச்சி பரவட்டும்.இதேவேளை இன்றைய இளைஞர்கள், நாளைய தலைவர்கள்.இவர்களின் எதிர்பார்ப்புகள், விருப்பங்கள், வாஞ்ஞைகள் இவ்வாண்டிலேயே நிறைவேற்றப்பட வேண்டும்.

இந்த ஆண்டு இளைஞர்களுடைய ஆண்டு. புதிய சகாப்தத்தை படைக்கப்போகும் இவ் அரசாங்கம் இளைஞர்களின் எண்ணங்களை நிறைவேற்றி நம்பிக்கை வலுவூட்டும் ஆண்டாக இந்த ஆண்டை நாம் எதிர்பார்க்கின்றோம். இளைஞர்கள் மத்தியில் புதிய யுகத்தைப் படைக்கப் போவது உறுதி வரலாற்றில் இளைஞர்கள் இப்புத்தாண்டில் தவறு இழைக்கக் கூடாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன் . உங்களுக்கும். உங்கள் குடும்பத்திற்கும் இப் புத்தாண்டு சிறப்புன் மலர்ந்து, ஒளிமயமான எதிர்காலம் அமைய எனது வாழ்த்துக்கள்.

# இரத்தினபுரி மாவட்டத்தில் தேசிய மீலாது நபி விழா

(ஸாகிர்)

2024 ஆம் ஆண்டுக்கான தேசிய மீலாது நபிவிழா இரத்தினபுரி மாவட்டத்தை மையமாகக் கொண்டு இம்முறை 40 ஆவது தேசிய மீலாது நபி விழாவாகக் கொண்டாடப்பட்டது.

முஸ்லிம்சமயபண்பாட்டலுவல்கள்திணைக்களம், இரத்தினபுரி மாவட்ட செயலகம் மற்றும் சப்ரகமுவ மாகாண கல்வி திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

குறித்த மீலாது விழா அண்மையில் நாட்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் காரணமாக பிற்போடப்பட்டு சிறிய விழாவாக இடம்பெற்றது.

இரத்தினபுரி பள்ளிவாசல், இரத்தினபுரி ஜன்னத் பள்ளிவாசல், பலாங்கொடை பள்ளிவாசல் ஆகிய பள்ளிவாசல்களை நினைவுபடுத்தி இதன்போது தபால் தலை முத்திரையும் வெளியிடப்பட்டது.

இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன தலைமையில், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்திணைக்களத்தின்பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸின் வழிகாட்டலில் இரத்தினபுரி சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற இந்நிகழ்வில், தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் டி. சுனில் ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

சப்ரகமுவ மாகாண பிரதி பிரதம செயலாளர் திலினி தர்மதாச, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனுஆராச்சி, மாகாண கல்வி பணிப்பாளர் தர்ஷனி இத்தமல்கொட மற்றும் சப்ரகமுவ மாகாணத்தின் பிரதி, உதவி செயலாளர், தகவல் தொழில்நுட்ப செயலாளர், திட்டமிடல் செயலாளர், கல்வி உதவிச் செயலாளர், இரத்தினபுரி மாவட்டத்தின் உதவிச் செயலாளர், பிரதேச செயலாளர், முஸ்லிம் பள்ளிவாசல்களின் தலைவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், இரத்தினபுரி அகில இலங்கை ஜம்இய்யத்துல்



உலமா சபை இரத்தினபுரி மாவட்டத் தலைவர் உட்பட உறுப்பினர்கள், இரத்தினபுரி மாவட்ட முஸ்லிம் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், புத்தசாசன கலாசார அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் அசங்க ரத்னாயக்க, புத்தசாசன கலாசார செயலாளர், முஸ்லிம் சயம பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ், பிரதி, உதவிப் பணிப்பாளர்கள், மேலதிகப் பணிப்பாளர் உட்பட திணைக்களத்தின் கலாசார மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் சர்வமதத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

ஒவ்வொரு வருடமும் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்ற மீலாது நபிவிழாவானது இம்முறை 40 ஆவது தேசிய மீலாது விழாவாக இரத்தினபுரி மாவட்டத்தில் இடம் பெற்றதோடு, இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையிலான கஸீதா, கிராஅத் மற்றும் கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 425 மாணவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசுத் தொகைகளும் இங்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் பாரம்பரிய இஸ்லாமிய கலை, கலாசார நிகழ்ச்சிகளும் நிகழ்வை மேலும் மெருகூட்டின.







மீலாது நபி விழா தொடர்பான விசேட உரையை அஷ்ஷெய்க் ரஸாத் ஸமானினால் நிகழ்த்தப்பட்டதுடன் நன்றியுரையை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் வழங்கினார்.

இந்த 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய மீலாதுன் நபிவிழாவில், இரத்தினபுரி மாவட்டத்தில் இருபது முஸ்லிம் பள்ளிவாசல்களின் அபிவிருத்திக்காக 100 லட்சம் ரூபா முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்டது.

முஹம்மது நபியின் பிறந்த நாள் மற்றும் மறைவை நினைவுகூரும் வகையில் முஸ்லிம்கள் மீலாது நபி தினத்தைக் கொண்டாடுகின்றனர், அது தொடர்பாக இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் மீலாது நபி தேசிய விழாவை நடத்தி அரசாங்கம் செயற்படுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



## பெப்ரவரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர்ஜகத்விக்ரமரத்னதலைமையில் நேற்றுநடைபெற்றநாடாளுமன்றஅலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இதற்கான இணக்கம் எட்டப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை முதலாவது மதிப்பீட்டுக்காக 2025 ஜனவரி 9 நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இதற்குஅமைய2025ஆம்ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு (வரவு செலவுத் திட்ட உரை) பெப்ரவரி 17 இடம்பெறவிருப்பதுடன், இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் பெப்ரவரி 18 முதல் பெப்ரவரி 25 வரை 7 நாட்கள் இடம்பெறவுள்ளன. அத்துடன் பெப்ரவரி 25 பிற்பகல் 6 மணிக்கு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் குறித்த குழுநிலை விவாதம் பெப்ரவரி 27 முதல் மார்ச் 21 வரை 4 சனிக்கிழமை நாட்கள் உள்ளடங்கலாக 19 நாட்கள் இடம்பெறவுள்ளது. வாக்கெடுப்பு மார்ச் 21 மாலை 6.00 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

வரவுசெலவுத்திட்ட காலப் பகுதியில் மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.00 மணி வரையான நேரம் 5 வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதுடன், மு.ப 10.00 மணி முதல் பி.ப 6.00 மணி வரையானகாலப்பகுதியில்வரவுசெலவுத்திட்ட விவாதம் இடம்பெறும்.

வாக்கெடுப்பு நடத்தப்படும் தினங்களான பெப்ரவரி 25 மற்றும் மார்ச் 21 ஆகிய தினங்கள் தவிர ஏனைய அனைத்து நாட்களிலும் மாலை 6.00 மணி முதல் 6.30 மணிவரையானகாலப்பகுதிசபைஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணைக்காக ஒதுக்கப்பட்டிருக்கும்.

## சிறிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது அது சாத்தியமில்லை.

2024 செப்டம்பர் 15 நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் வினாத்தாளில் முன்னதாகவே வெளியான மூன்றுவினாக்களுக்குஇலவசமதிப்பெண்கள் வழங்குவது அடிப்படை மனித உரிமை மீறல் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் வல்லுனர்கள் முன்வைத்த மூன்று பரிந்துரைகளில் இருந்து பொருத்தமான பரிந்துரையை தெரிவு செய்து அதனை உடனடியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பரீட்சைகள் ஆணையாளர்நாயகத்திற்குஉயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

## மக்களின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிந்தது.

அதற்கிணங்க, மக்கள் எதிர்பார்க்கும் சிறந்த ஆட்சியொன்றை உருவாக்கும் நோக்கில் அன்றிருந்த அரசியல் கலாசாரத்தில் பெரும் மாற்றத்தை மேற்கொண்டு, மக்கள் ஆணையின் பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்பைநிறைவேற்றுவதற்குநாம்தற்போது துரிதமாக செயற்பட்டு வருகின்றோம்.

கிராமிய வறுமையை ஒழித்தல், 'தூய சிறீலங்கா' திட்டம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தைகட்டியெழுப்புதல்ஆகியவை நாட்டின்முன்னணிஅபிவிருத்தித்தேவைகளாக நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

அந்தப் பின்னணியில் சமூக, சுற்றாடல் மற்றும் நெறிமுறை புத்தெழுச்சியின் ஊடாக சமூகத்தை மேலும் மேம்பட்ட நிலைக்கு உயர்த்தும் நோக்கில் 'தூய சிறீலங்கா' வேலைத்திட்டம் புத்தாண்டு உதயத்துடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த பரிமாற்ற ரீதியான அபிவிருத்திச் செயற்பாடுகளின் ஊடாக நாடென்ற ரீதியில் நாம் 2024 ஆம் ஆண்டில் அடைந்த பொருளாதார ஸ்திரத்தன்மையை மேலும் உறுதிப்படுத்த இருக்கிறோம்.

அனைவருக்கும் 'வளமான நாடு - அழகான வாழ்வை' பெற்றுக் கொடுப்பதற்காக புதிய மனப்பாங்குகளை மேம்படுத்தி, புதிய உறுதிப்பாடுகளை மனதில்கொண்டு சகோதரத்துவத்துடன் முன்னோக்கி வருவதற்கு 2025 புதுவருட உதயத்துடன் சிறந்த வாய்ப்பு உருவாகியிருப்பதாக நான் உறுதியாக நம்புகிறேன்.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் நேய ஆளும்தரப்பை உருவாக்கி, அனைத்து மக்களும்ஒன்றிணைந்தஅபிவிருத்தியடைந்த இலங்கைபற்றியகனவைநனவாக்கும்வாய்ப்பு உங்களுக்கும் எமக்கும் கிடைத்துள்ளது.

விட்டுக்கொடுக்க முடியாத இந்தப் பெரும் பொறுப்பு நம் அனைவரின் தோள்களிலும் சுமத்தப்பட்டுள்ளது. அந்தப் பொறுப்பு குறித்து எங்களுக்கு நல்ல புரிதல் உள்ளது.

இந்த நூற்றாண்டின் தவறவிட்ட சாதனைகளை மீண்டும் நாட்டுக்கு வென்று கொடுக்கவும் மக்களின் கனவுகளை நனவாக்கவும், 2025ஆம்ஆண்டுபுத்தாண்டில் மேலும் வீரியத்துடனும் உறுதியுடனும் அர்ப்பணிக்க நடவடிக்கை எடுப்போம்.

தேசிய மறுமலர்ச்சிக்காக எங்களுடன் இணைந்து பங்காற்றும் உங்கள் அனைவருக்கும்செழுமையும்ஒற்றுமையும் புதிய நம்பிக்கையும் நிறைந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

## பொலிஸின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும்எக்ஸ்கணக்குகள்தற்போது மீண்டும் இலங்கை காவல்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

பொலிஸ் யூடியூப் சேனல் இன்னும் இலங்கை பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. தகவல் தொழில்நுட்ப பிரிவு அதிகாரிகள் அதை மீண்டும் கட்டுப்பாட்டில் கொண்டும்வரும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த இணையத் தாக்குதல் தொடர்பில் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முன்னேற்றமடையும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் பரிபூரணமான வாழ்க்கையை வாழக்கூடிய எதிர்காலத்தை உருவாக்குவதே எமது நோக்கமாகும்.

ஒரு தேசமாக ஒன்றிணைந்து செயலாற்றுவதற்கு கடந்த காலங்களில் எமக்கு பல சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. எனினும், குறித்த தருணங்களின் நன்மைகளை முழுவதுமாக அடைவதில் நாம் தோல்வி கண்டோம்.

எவ்வாறெனினும்அவ்வாறுகிடைத்துள்ள சந்தர்ப்பங்களை தவற விடாது அவற்றை பாதுகாத்துக்கொள்ள நாம் ஒன்றிணைந்து செயலாற்றவேண்டும். இந்த நெருக்கடியான காலங்களிலும்பொதுமக்களுக்குசேவையாற்ற அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றுகிறது. முன்னேற்றமடையும் உறுதியுடன் அனைவரும் 2025ம் ஆண்டில் காலடி எடுத்து வைக்க உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கிய பயணம் சவால் மிக்கதாக இருந்த போதிலும் குறித்த இலக்கை அடைவதற்கென பல்வேறு முக்கியமான நடவடிக்கைகளை நாம் ஏற்கனவே மேற்கொண்டுள்ளோம். மலர்ந்துள்ள இந்த 2025ஆம் ஆண்டு அனைத்து பிரஜைகளுக்கும் அமைதியும் மகிழ்ச்சியும் சுபீட்சமும் கொண்டு வரும் ஆண்டாக அமைய வேண்டும் என நான் வாழ்த்துக்கின்றேன்.

புத்தாண்டை வெற்றியுடன் ஆரம்பிப்பதற்கும் எமது நாட்டிற்கு நல்லதொரு எதிர்காலத்தைஉருவாக்குவதற்கும்எம்முடன் இணையுமாறு புத்தாண்டை வரவேற்கும் இந்த தருணத்தில் அனைவருக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன். உலகத்தின் மத்தியில் அபிமானம் மிக்க வளமான நாடாக இலங்கை என்ற நாமத்தை மிளிரச் செய்வதற்குநாம்அனைவரும்ஒன்றிணைந்து செயலாற்றுவோம்.

## பொதுமக்களுக்குப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்களை விசாரணை செய்ய வேண்டியுள்ளது. அதற்கமைய, முன்னைய அரசுகளின் கீழ் அரச நிறுவனங்கள் செயற்பட்டுள்ள விதம் தொடர்பிலும், தற்போது அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பிலும் முன்வைக்கப்படும் பொது மக்களின் முறைப்பாடுகள், விளக்களித்தல் மற்றும் பல்வேறு மூலங்களிலிருந்து தெரியவரும் தகவல்கள் தொடர்பான விடயங்களை விசாரணை செய்வதற்காக அமைச்சு மட்டத்தில் நாடுதழுவிய சேவையில் முதலாம் தர அலுவலர் அல்லது புலனாய்வுச் செயன்முறை தொடர்பான அனுபவமுள்ள அரச சேவையின் முதலாம் தர நிறைவேற்று அதிகாரியின் தலைமையில் விசாரணைப் அலகைநிறுவுவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது -என்றார்.

## தீபமேற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீபங்கள் ஏற்றப்படடு புத்தாண்டுக்கு வரவேற்களிக்கப்பட்டது.





# தகவல் தரலாம்

நிதி மோசடியில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளமுன்னாள் அமைச்சர்மனுஷநாணயக்காரவின்சகோதரர் திசர நாணயக்காரவுக்கு பணம் வழங்கிய வேறுஎவரேனும்இருப்பின்குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது. இது குறித்த தகவல்களை வழங்குவதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களம் 0112 337 219 என்ற விசேட தொபேசி இலக்கத்தையும் வழங்கியுள்ளது.

குற்றப்புலனாய்வுதிணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்ட மனுஷநாணயக்காரவின் சகோதரர் திசர நாணயக்காரவை ஜனவரி 7 வரைவிளக்கமறியலில்வைக்குமாறுகம்பஹா நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றத்தில் சந்தேகநபர் முன்னிலைப் படுத்தப்பட்ட போது, 2019 முதல் 2024 ஒக்டோபர் வரையான காலப்பகுதியில், அவரின் கணக்கில் 27 கோடி ரூபா பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். திசரநாணயக்கார அண்மையில் (28) பிபிலை பகுதியில் வைத்து குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். பின்லாந்தில் வேலைவாய்ப்பைப்பெற்றுத்தருவதாகக்கூறி பண மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில், இவர் கைதுசெய்யப்பட்டார்.

நபரொருவரிடம் 40 இலட்சம் ரூபா பணத்தைக் கோரிய இவர், அந்நபரிடமிருந்து 30 இலட்சம் ரூபாவை பெற்றுள்ளார் என்றும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

முறைப்பாட்டைச் சமர்ப்பித்த நபர் தலா 15 இலட்சம் ரூபா வீதம் இரண்டு தடவைகளில் 30 இலட்சம் ரூபாவை திசரவின் கணக்கில் வரவு வைத்துள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுஅதிகாரிகள்நீதிமன்றத்தில்தெரிவித்தனர். இதையடுத்தே சந்தேகநபரின் வங்கிக் கணக்கு தொடர்பான விபரங்களைப் பெற்றுக்கொண்டதாக குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

# நாணய நிதியத்திற்கு நம்பிக்கை ஏற்பட்டால் உடன்படிக்கையில் திருத்தங்கள் சாத்தியமே

## இப்படிச் சொல்கிறார் அமைச்சரவைப் பேச்சாளர்

சர்வதேச நாணய நிதியம் மாற்றங்களை ஏற்படுத்த முடியாத நிபந்தனைகளை முன்வைக்கவில்லை. எமது வருமானம் மற்றும் செலவு முகாமைத்துவத்தில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டால் சில விடயங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் சிக்கல் இல்லை என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு தொடர்ந்து கொண்டிருக்கின்றது. தற்போதுள்ள பொறிமுறைக்கு உட்பட்டுத்தான் நிவாரணத் திட்டங்களும்நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதேவேளை நாணய நிதியம் மாற்றங்களை ஏற்படுத்த முடியாத நிபந்தனைகளை முன்வைக்கவுமில்லை.

நாட்டின் வருமானம் மற்றும் செலவு முகாமைத்துவம் தொடர்பில் அவர்களுக்கு நம்பிக்கைஇருந்தால்,எம்மால்சிலவிடயங்களை மாற்ற முடியும். இணக்கப்பாட்டிலுள்ள நிபந்தனைகள் எந்தளவுக்கு மக்களுக்கு நன்மை தரக் கூடியவையாக உள்ளன என்பது தொடர்பிலேயே நாம் அவதானம் செலுத்தியிருக்கின்றோம்.

ஆளும்தரப்பு என்ற ரீதியில் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதற்கமையவே எமது செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். நாட்டின் அபிலாஷைகளுக்காக மக்களின் தேவைகளை முன்னிலைப்படுத்தி சர்வதே நாணயநிதியத்துடனான இருதரப்பு பேச்சுக்கள் தற்போதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதில் எவ்வித சிக்கலும் இல்லை.

நாணயநிதியத்திடமிருந்துகடன்தொகைகள் உரிய காலத்தில் கிடைக்கின்றன. நாம் மக்கள் சார்பில் அவர்களிடம் எமது நிலைப்பாடுகளை முன்வைத்துக்கொண்டிருக்கின்றோம்என்றார்.

# மண்ணெண்ணெய்யின் விலை மட்டும் குறைப்பு

*இன்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை கனியவள கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.*

*188 ரூபாவாக இருந்த மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 183 ரூபாவாகும்.*

*ஏனைய எரிபொருட்களின் விலையில் மாற்றமில்லை எனவும் இலங்கை கனியவள கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது*

காலைக்கதிர் Kalaikkathir

# நெல் ஆலை உரிமையாளர்களுக்கு கொள்வனவு உதவி ரூ 50 மில்லியன்

## அடகுக் கடன் முறையை அறிமுகப்படுத்தியது ஆளும்தரப்பு

நெற் கொள்வனவுக்கான அடகுக் கடன் முறைமை 2024ஃ2025 ஐ பெரும்போகத்திலிருந்து வருடாந்த வேலைத்திட்டமாக நடைமுறைப் படுத்தும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நெல் அறுவடைக்கான நியாயமான விலையை உறுதிப்படுத்தல் மற்றும் சிறு, நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களை பலப்படுத்தும் நோக்கில் சலுகை வட்டி வீதத்தில் அரச வங்கிகள் மூலமாக அடகுக் கடன் முறையொன்று கடந்த 2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த போகங்களில் இவ்வேலைத் திட்டம் சிறந்த பெறுபேறுகளை அடைந்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளமையால், 2024ஃ25 பெரும்போகம் தொடக்கம் ஒவ்வொரு போகத்திலும் இவ்வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது பொருத்தமானதெனக் கண்டறிப்பட்டுள்ளது.

அதற்கமைய, திட்டவட்டமான அளவுகோல்களின் பிரகாரம், நாளாந்த நெல் குற்றும் கொள்ளவு உயர்ந்தபட்சம் 25 மெற்றிக்தொன் வரைக்கும் சிறு மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களுக்கு (கூட்டுறவுச் சங்க நெல் ஆலைகள் உள்ளடங்கலாக) அரச மற்றும் தனியார் வங்கிகள் மூலம் சலுகை வட்டி வீதத்தில் உயர்ந்தபட்சம் 50 மில்லியன் ரூபா வரைக்கும் நெல் கொள்வனவுக்கான அடகுக் கடன் முறையை அமுல்படுத்துவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

# மன்மோகன் இரங்கல் புத்தகத்தில் கைச்சாத்திட்டார் சிறிதரன் எம்.பி.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்றக்குழுக்களின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறிதரன் மறைந்த பாரதப்பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கொழும்பில் உள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரகத்தில் அஞ்சலி செலுத்தி இரங்கல் குறிப்பில் கைச்சாத்திட்டார்.

மறைந்த தலைவருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கொழும்பிலுள்ள



இந்தியத் தூதரகத்தில் இரங்கல் குறிப்புப் புத்தகம் திங்கட்கிழமை திறக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அதில் முதல் நாளிலேயே கையெழுத்திட்டிருந்தார். அந்தப் புத்தகத்தில் சிறீதரன் நேற்றுக் கையெழுத்திட்டார்.

# மறைந்த இந்திய பிரதமருக்கு எதிர்க்கட்சித் தலைவர் இரங்கல்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று (செவ்வாய்க்கிழமை) கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் மறைந்த இந்தியாவின் முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் அவர்களுக்கு தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

மறைந்த கலாநிதி மன்மோகன் சிங்கின் குடும்பத்தினருக்கும், இந்திய அரசாங்கத்திற்கும் தனது இரங்கலை இதன்போது தெரிவித்துள்ளார்.

அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் பதிவேட்டிலும் கையொப்பமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# டெங்கு நோயினை கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுங்கள்

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. கோரிக்கை

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் மிக வேகமாக பரவிவருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

இதுவரையில் பலர் நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் நோயாளிகளின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என அச்சம் காணப்படுகிறது.



இதனைக் கருதிற்கொண்டு டெங்கு நுளம்பினை ஒழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை அவரசமாக மேற்கொள்ளுமாறு நாடளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம் ஹிஸ்புல்லாஹ், திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் பிரஸ்தாபித்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட மாவட்ட சுகாதார வைத்திய பணிப்பாளர் மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதாகத் தெரிவித்தனர்.

# தேசிய ஆக்க இலக்கிய பிரதிக்கான விருது விழா சனியன்று சிறப்பிப்பு

26 ஆவது தேசிய ஆக்க இலக்கிய பிரதிகளுக்கு விருதுகள் வழங்கும் விழா கடந்த 28 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கொழும்பு-7 இல் அமைதுள்ள மகாவலி கேந்திர நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் கலாசார அமைச்சர் கலாநிதி ஹினிதுமசுனில்செணெவியும் முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனவும் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டு வெற்றியாளர்களுக்கு விருதுகள் வழங்கினார்கள்.

இவ்விழாவில் பிரதம அதிதியாக தேசிய நூலகச் சேவை சபைத் தலைவர் கலாநிதி ரத்னஸ்ரீ விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டார். மற்றும் சிங்கள, தமிழ், ஆங்கில இலக்கிய அறிஞர்கள் பலர் கலந்து கொண்டு வெற்றியாளர்களுக்கு விருதுகள் வழங்கினார்கள்.

இவ்விழாவில் ஆங்கில சிங்கள தமிழ் மொழிகளில் சிறந்த பிரதிகள் வழங்கிய எழுத்தாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. தமிழில் சிறந்த ஆக்கப் பிரதிகளில் சம்மாந்துறை சேர்ந்த சித்தி ,ரபீக்கா பாயிஸின் 'வளகு வாப்பா போடியின் ஊஞ்சல்' எனும் சிறுகதைத் தொகுதி பெற்றுக் கொண்டது, சிறந்த கவிதைப் பிரதிக்கான விருதினை பதுளையை சேர்ந்த கிருஷ்ணசாமி அருளின் காலா தீதமும் சாம்பற்குவியலும் என்ற கவிதைத் தொகுதியும் பெற்றுக் கொண்டது.

இவ்விழாவில் தமிழ் மொழிப் போட்டிக்கு இணைப்பாளராக கடமை ஆற்றிய மேமன்கவியும் கௌரவிக்கப்பட்டார்.







# ‘பிஞ்சு மனம்’ சிறுகதை நூல் ஜனவரி 5 அன்று வெளியீடு

(ஹஸ்பர்)

வெலிகமரிம்ஸாமுஹம்மத் எழுதிய ‘பிஞ்சு மனம்’ சிறுகதை நூல் வெளியீட்டு விழா 2025 ஜனவரி 05 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் கலாபூஷணம், கவிஞர்திக்குவல்லைஸப்வான் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

பூங்காவனம் இலக்கிய வட்டம்ஏற்பாடுசெய்திருக்கும் இந்நிகழ்வானது தேசத்தின் கண் - தமிழ் மணி மானா மக்கீன், கலைஞர் - கவிஞர் எம்.எஸ். அப்துல் லத்தீப் ஆகியோரின் முன்னிலையில் நடைபெறவுள்ளது. தொழிலதிபர் சமூக தீபம், அல்ஹாஜ் எம்.சீ. பஹார்தீன் நூலின் முதற் பிரதியையும், கலைஞர் அக்குறணை சஹாப்தீன் கௌரவப் பிரதியையும் பெற்றுக்கொள்ளவுள்ளார்கள்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர், முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியுதீன் அவர்களும் விசேட அதிதியாக தொழிலதிபரும் சமூக சேவையாளருமான அல்ஹாஜ் எம்.ஏ.ஸீ. மஹ்ரூம் அவர்களும், கௌரவ அதிதிகளாக கொடைவள்ளல் அஸ்ஸெய்யத் ஹனீப் மௌலானா, பிரபல தொழிலதிபர் அல்ஹாஜ் ஏ.ஆர்.எம். அரூஸ் ஆகியோரும், சிறப்பு அதிதிகளாகொழும்புபல்கலைக்கழக முன்னாள் உளவளத்துறை விரிவுரையாளர் அல்ஹாஜ் யூ.எல்.எம். நௌபர், மூஷான் இன்டர்நெஷனல் தலைவர் அல்ஹாஜ் எம். முஸ்லிம் ஸலாஹுதீன், முன்னாள் அல்ஹிதாயா அகதியா பாடசாலை அதிபர் ஜனாப் எம்.எச்.எம். நஸீர், அக்ரம் பவுன்டேசன் தலைவர் அல்ஹாஜ் ரீ.ஏ. முஹம்மத் அக்ரம், அப்துல்லாஹ் இன்டஸ்ட்ரீஸ் அன்ட் பெகேஜிங் பிரைவேட் லிமிடெட் உரிமையாளர் அல்ஹாஜ் ஏ. ஹசன் முபாரக், டிரான்ஸ்ஏஸியா தொழிலதிபர் எம்.வை.எம். முகர்ரம், தொழிலதிபர் எம்.ஏ.எம். இல்ஹாம், அமேசன் கல்லூரி நிறுவனர் ஜனாப் இல்ஹாம் மரிக்கார் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

மௌலவி (நிலாமி) எம்.ஏ. ரம்ஸானின் கிராஅத்துடன் ஆரம்பிக்கவிருக்கும் இந்நிகழ்வில் கவிமணி என். நஜ்முல் ஹுஸைன் வரவேற்புரையை நிகழ்த்த, நிகழ்வின் தொடக்கவுரை மற்றும் ஆசியுரையை இலங்கை வானொலி முஸ்லிம் சேவை முன்னாள் பணிப்பாளர் கலாபூஷணம் அல்ஹாஜ்.எம்.இஸட். அஹ்மத் முனவ்வர் (ஜேபி) நிகழ்த்துவார். தொடர்ந்து தலைமையுரையை கலாபூஷணம் திக்குவல்லை ஸப்வான் நிகழ்த்த, வாழ்த்துரைகளை சத்திய எழுத்தாளர், கலாபூஷணம் எஸ்.ஐ. நாகூர் கனி, திருமதி. வசந்தி தயாபரன் (தகவம்), தமிழ் தென்றல் அலி அக்பர் ஆகியோர் நிகழ்த்தவுள்ளார்கள்.

வரகாபொல பாபுல் ஹஸன் மத்திய கல்லூரி அதிபர், ஜனாப் ஜே.எம். றாபில் அவர்கள் நூலாசிரியர் பற்றிய அறிமுகவுரையை நிகழ்த்த, ’முன்னணிப் படைப்பிலக்கியவாதி ரிம்ஸா முஹம்மத்’ என்ற தலைப்பில் டாக்டர் எழுத்தாளர், ச. முருகானந்தன் கருத்துரை நிகழ்த்துவார். தொடர்ந்து தினகரன் வாரமஞ்சரி கவிதைப் பூங்கா முன்னாள் பொறுப்பாசிரியர் கவிஞர் ரஷீத் எம். றியாழ் கவி வாழ்த்தை வழங்குவார்.

நூல் பற்றிய நயவுரையை சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் முன்வைப்பார். அதனைத் தொடர்ந்து கலைஞர் திக்குவல்லை எஸ்.எம். ஹிமாயத்துல்லா வாழ்த்துப் பாடலை இசைப்பார். ஏற்புரை மற்றும் நன்றியுரையை நூலாசிரியர் வெலிகம ரிம்ஸா முஹம்மத் நிகழ்த்துவார். இந்த நூல் வெளியீட்டு நிகழ்ச்சிகளை திக்வல்லை ஸுஹ்ரி அழகுற தொகுத்து வழங்கவுள்ளார்.

சிறப்புப் பிரதிகள் பெறும் ஊடக அதிதிகளாக மூத்த பத்திரிகையாளர் ஜனாப் என்.எம். அமீன், ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் டாக்டர் ஞானம் ஞானசேகரன், சிரேஷ்ட ஊடகவியலாளர் கலைஞர் ராதா மேத்தா, வசந்தம் தொலைக்காட்சி, வசந்தம் வானொலி பிரதி முகாமையாளர் ஜனாப் எம். சித்திக் ஹனீபா, இலங்கை வானொலி முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் திருமதி எம்.ஜே. பாத்திமா ரினூஸியா, தயாரிப்பாளர் ஜனாப் ஏ.எம்.எம். ரழீம், பாரம்பரியம் புகழ் ஜனாப் எம்.எஸ்.எம். ஜின்னா, வானொலிக் கலைஞரும் அறிவிப்பாளருமான ஆசிரியை ஸில்மியா ஹாதி, சிரேஷ்ட ஒலிபரப்பாளரான கவிஞர் அஷ்ரப் சிஹாப்தீன், ரூபவாஹினி தயாரிப்பாளர் ஜனாப் முபாரக் முகைதீன், ஜனாப் ஏ.எம். தாஜ், ஒலிபரப்பாளர் ஜனாப் அஷ்ரப் அமீர், தினகரன் ஆசிரியபீட ஜனாப் ஷம்ஸ் பாஹிம், கே. ஈஸ்வரலிங்கம், விடிவெள்ளிப் பிரதம ஆசிரியர் எம்.பீ.எம். பைரூஸ், தமிழன் பிரதம ஆசிரியர் திரு சிவா ராமசாமி, வீடமைப்பு திணைக்களத்தின் ஊடகப்பிரிவு சிரேஷ்ட முகாமையாளரும் ஊடகவியலாளருமான அஷ்ரப் ஏ. சமத், ஊடகவியலாளர் ஜனாப் ஏ.எஸ்.எம். ஜாவித், எழுத்தாளரும் ஊடகவியலாளருமான திருமதி சூரியகுமாரி ஸ்ரீதரன் ஸீஜீஸீ டோக் சொப் ஜனாபா ரினூஸா நௌஷாத், படப்பிடிப்பாளர் ஜனாப் முஹம்மது நஸார் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

திருமதி நூருல் அயின் நஜ்முல் ஹுஸைன், கலாநிதி யூசுப் மரைக்கார், மாவனல்லை கலாபூஷணம் எம்.எம். மன்ஸூர், சமூக சேவையாளர் அல்ஹாஜ் எம்.எப்.எம். ஹனீப், சமூக சேவையாளர் ஜனாப் மஹ்ரூப் நழீம், ஜனாப் பயாஸ் அப்துல் ரஸாக், கவிஞர் யாழ். அஸீம், எழுத்தாளரும் சட்டத்தரணியுமான சடகோபன் இராமையா, இலங்கை நெய்னார் சமூகநல காப்பகத் தலைவர் ஜனாப் இம்ரான் நெய்னார், கவிஞர் ரவூப் ஹஸீர், எழுத்தாளர் சுதாராஜ், தேசிய கல்வி நிறுவக விரிவுரையாளர் கீதா கணேஷ், டாக்டர் ரவூப் ஹபீஸ், கவிஞர் சிந்தனைப் பிரியன் முஸம்மில், கண்ணகி கலாலய திரு. ஏ.கே. இளங்கோ, கலாபூஷணம் மஸீதா அன்ஸார், எழுத்தாளர் திருமதி பவானி சச்சிதானந்தம், பாடகியும் கவிஞருமான திருமதி அருந்தவம் அருணா ஆகியோர் சிறப்புப் பிரதி பெரும் அதிதிகளாக நிகழ்வில் கலந்து சிறப்பிப்பார்கள்.

கலை இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள், சமூக சேவையாளர்கள், நண்பர்கள் உட்பட இலக்கிய ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டு இந்த வெளியீட்டு நிகழ்வை சிறப்பிக்கவுள்ளார்கள்.



காலைக்கதிர் Kalaikkathir

# எருக்கலம்பிட்டி முஸ்லிம் மஹா வித்தியாலயத்துக்கு 7 கோடி ரூபாவுக்கு ரிஷாத் முயற்சியால் புதிய கட்டம்

## நிர்மாணப் பணிகளை நேரில் சென்று பார்த்தார்

அகிலஇலங்கைமக்கள்காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமானரிஷாத்பதியுதீனின் முயற்சியில் புத்தளம், நாகவில்லு பிரதேசத்தின், எருக்கலம்பிட்டி முஸ்லிம் மஹா வித்தியாலத்தில், சுமார் 07 கோடி ரூபா நிதியொதுக்கீட்டில்அமைக்கப்பட்டு வரும், 3 மாடிக்கட்;டடத்தின் நிர்மாணப்பணிகளை ரிஷாத் எம்.பி. ஞாயிற்றுக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

மேற்படி விஜயத்தின் போது, வகுப்பறைக்கட்டட வேலைகளை துரிதப்படுத்துவதற்கு தேவையான ஆலோசனைகளையும் வழங்கிய அவர்,தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ், பாடசாலைக்குத் தேவையான இலத்திரனியல் உபகரணங்களையும் கல்லூரி நிர்வாகத்தினிடம் கையளித்தார்.

இந்நிகழ்வின் போது, மக்கள் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரும்முன்னாள்மாகாண சபை உறுப்பினருமான என்.ரீ.எம். தாஹிர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான றிபாஸ், ரிஜாஜ் மற்றும் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் நாசர், பாடசாலையின்அதிபர்,பிரதிஅதிபர், பாடசாலையின் அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் உட்பட கட்சியின் நாகாவில்லு கிளை முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.










# மட்டக்களப்பில் கரை ஒதுங்கிய மூங்கில் படகு தொடர்பில் பொலிஸார் விசாரணை

மட்டக்களப்பு மாவட்டம் கதிரவளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பால்சேனை பிரதேசத்தில் மர்ம படகு ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

மூங்கிலால்செய்யப்பட்ட இப்படகானது நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை முதல் கரை ஒதுங்கியுள்ளது.

இந்நிலையில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில்தற்போது விசாரணைகள் கதிரவளி பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.



இப்படகில்வந்தவர் யார் என்பது குறித்த விசாரணையை கதிரவளி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.



# இரண்டாயிரத்து இருபத்தைந்து இன்பம் கொடுத்து நிற்கட்டும் !

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண் ..... ஆஸ்திரேலியா**

நல்லன நடக்க வேண்டும்

நாடெலாம் சிறக்க வேண்டும்
வல்லமை பெருக வேண்டும்
வாழ்வது உயர வேண்டும்
தொல்லைகள் தொலைய வேண்டும்

தோல்விகள் அகல வேண்டும்
இல்லது என்னும் வார்த்தை
இன்மையாய் ஆதல் வேண்டும்
போரெனும் எண்ணம் மண்ணில்

பொசுங்கியே போதல் வேண்டும்
மாசுடை ஆட்சி மண்ணில்
மடிந்துமே ஒழிய வேண்டும்
ஊழலும் ஒழிய வேண்டும்

உண்மையே நிலைக்க வேண்டும்
வாய்மையின் வழியில் மக்கள்
மண்ணிலே நடக்க வேண்டும்
உழைப்பவர் உயர வேண்டும்

நல்லூதியம் கிடைக்க வேண்டும்
கொடுப்பவர் பெருக வேண்டும்
குவலயம் சிறக்க வேண்டும்
கல்வியில் உயர்வு வேண்டும்

கசடுகள் அகல வேண்டும்
கண்ணியம் என்றும் வாழ்வில்
கட்டாயம் அமர வேண்டும்
அறவழி என்னும் எண்ணம்

அகத்தினில் அமர வேண்டும்
அன்புதான் உயர்வு என்று
அனைவரும் உணர வேண்டும்

ஆன்மீகம் தளைக்க வேண்டும்
அமைதியே நிலவ வேண்டும்
ஆணவ அரக்கன் மண்ணில்
அமிழ்ந்துமே போக வேண்டும்

இரப்பது அகல வேண்டும்

கொடுப்பது உயர வேண்டும்
பொறுப்பது சிறப்பு என்று
விருப்புடன் ஏற்க வேண்டும்

வேற்றுமை அகல வேண்டும்

வெறுப்புகள் ஒழிய வேண்டும்
சமத்துவம் நிலைக்க வேண்டும்
சன்மார்க்கம் தளைக்க வேண்டும்

பண்பது உயரவேண்டும்

பக்குவம் நிறைதல் வேண்டும்
அன்பினைப் பகிர்ந்து மாந்தர்
அனைவரும் இணைதல் வேண்டும்

புது வருடம் அத்தனையும்
சுமந்து கொண்டே வரட்டும்
வரும் அனைத்தும் எங்களுக்கு
வளங் கொடுக்க வரட்டும்

புது வெளிச்சம் காட்டப்

புது வருடம் வரட்டும்
வரு வருடம் நமக்கு
வரங் கொண்டு வரட்டும்

இரண் டாயிரத்து இருபத்தைந்து
இன்பம் கொடுத்து நிற்கட்டும்
நன்றாய் மக்கள் வாழவே
நவமாய் மலர்ந்து பொலியட்டும்

காலைக்கதிர்
Kalaikkathir

# கழிவைக்கொண்டு சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருள்களை உருவாக்கல் விழிப்புணர்வு

(ஷினாஸ்)

டயகோணியா மற்றும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி மற்றும் செயல் முன்னணி அனுசரணையில் யு சிஎஸன் திட்டத்தின் ஊடாக சமூக அபிவிருத்தி அமையத்தின் ஏற்பாட்டில், சாய்ந்தமருது நண்பர்கள் வட்டம் சமூக சேவை அமைப்பின் ஒத்துழைப்புடன் விழுமியக் கல்வி ஊடாக, புத்தாக்க சமூக தீர்வுகளை வழங்கும் தொனிப்பொருளில், கடற்கரை சுத்தப்படுத்துதல் மற்றும் கழிவுகளைக் கொண்டு சுற்றுச்சூழலுக்கு உகந்த வடிவமைப்புகளை உருவாக்குதல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு சாய்ந்தமருதில் நடைபெற்றது.

சுற்றுச்சூழல் செயற்பாடுகளில் மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் ஈடுபாட்டை அதிகரித்து, புத்தாக்க செயற்பாடுகளில் மாணவர்களின் பங்களிப்பை பெறும் நோக்கில், இளைஞர்கள் மத்தியில் நற் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்முனை ஸாஹிரா கல்லூரி தேசியப் பாடசாலையின் சுற்றாடல் கழக அங்கத்தவர்கள், சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயம் மற்றும் சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவத் தலைவர்கள், சாய்ந்தமருது நண்பர்கள் வட்ட சமூக சேவை அமைப்பின் அங்கத்தவர்கள் அத்துடன் சமூக ஆர்வலர்களின் பங்குபற்றலுடன் இந்நிகழ்வு நடைபெற்றது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஸ்லம் சஜா, சுங்கத் திணைக்கள பிரதி பணிப்பாளர் ஆதம்பாவா ஜலீல், விவசாய திணைக்கள விவசாய போதனாசிரியர் அப்ஸல் றிப்கி ஆகியோர் இதில் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

இதன்போது, சுற்றாடலில் காணப்படும் கழிவு பிளாஸ்டிக் போத்தல்களை கொண்டு சுற்றுச்சூழல்





வடிவமைப்பு,

இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் வகைகளும் அவற்றால் ஏற்படும் சூழல் மாசடைவுகளும், வீட்டுக் கழிவுகளைப் பயன்படுத்தி பொருளாதார ரீதியாக பயனடைதல் ஆகிய தலைப்புகளில் வளவாளர்களால் சிறப்பு பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டன.

கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் அப்துல் மலீக், கல்முனை ஸாஹிறா கல்லூரி தேசிய பாடசாலை அதிபர் ஜாபிர் மற்றும் பிரதி அதிபர் தன்ஸில், கல்முனை மாநகர சபை பொறியியலாளர் ஜெளஸி, சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலய அதிபர் சிறாஜ் மற்றும் உதவி அதிபர் பௌஸான், இலங்கை மின்சார சபையின் மின் அத்தியட்சகர் ஆரிஸ் அக்பர், இலங்கை உயர் தொழிநுட்பவியல் கல்வி நிறுவன விரிவுரையாளர் நௌஷாட், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஸமீலுல் இலாஹி, சாய்ந்தமருது பிரதேச செயலக கரையோரம் பேணல் உத்தியோகத்தர் நுஸ்ரத் அலி, தென்கிழக்குப் பல்கலைக்கழக உத்தியோகத்தர்களான அமீர் மற்றும் ஹாரிஸ், சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலய ஆசிரியர் ஸாஹிர், இஸ்லாமிக் றிலீப் நிறுவன உத்தியோகத்தர் ஆஷிக், கிழக்குப் பல்கலைக்கழக உத்தியோகத்தர் சர்ஜூன் அத்துடன் சாய்ந்தமருது நண்பர்கள் வட்டம் சமூக சேவை அமைப்பின் செயற்குழு அங்கத்தவர்களான அமாசிர் மற்றும் நுஸ்தி ஷஹ்மி ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டதுடன், இதில் பங்குபற்றிய மாணவர்களுக்கும் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.01.2025இல் வெளியிடப்பெற்றது